# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550

UGC - பல்கலைக் கழக மானிய குழுவின் அங்கீகாரம் பெற்றது

ஜீலை – 2019

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118



பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550

visit us: www.pallavipathippakam.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானிய குழுவின் அங்கீகாரம் பெற்றது

**UCG RECOGNIZED JOURNAL**

**UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118**

மலர் : 7 ஜூலை- 2019 இதழ் : 7



**பதிப்பாசிரியர்**

**நல். நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavoor.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.P.Sathyamoorthy**
*Madurai Kamarajar University, Madurai.*
mkutamil2010@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Tiruchy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.*
mkutamil2010@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavoor.*
skavithatamil@gamil.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Director, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

## ADVISORY BOARD

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Treenedi Girls College, Namakkal.*
anuradha.pugal@gamil.com

**Dr.P.Senthilkumar**
*Periyar University Constituent Arts and Science College, Dharmapuri.*
Senthakil06@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gamil.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பண்ணாட்டு வளாகம், இயக்குனர், இலங்கை.*
raapa.arooz@gmail.com

## ஆலோசனை குழு

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் கல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anuradha.pugal@gamil.com

**முனைவர் பொ.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தருமபுரி.*
Senthakil06@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** – காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜீலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். 2013-ம் ஆண்டு முதல் காலாண்டிதழாக ஆண்டுதோறும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இவ்விதழ் வெளியாகிறது. கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற பலரும் இவ்விதழில் ஆய்வு கட்டுரை எழுதி வருகின்றனர். இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : எம்.எஸ். வேர்டில் (MSWord), ல் A4 ஆளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (LiningSpace), 12 புள்ளி எழுத்தளவில் மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரை தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. தனி இதழ் விலை ரூ.300/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 2400/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம் கல்வி நிறுவனங்கள் | - | ரூ. 3000/- |
| வாழ்நாள் கட்டணம் | - | ரூ. 25,000/- |
| புரவலர் கட்டணம் | - | ரூ. 50,000/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**Mobile Banking**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com





**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையதளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையதளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. நாஞ்சில் நாடன் புதினங்களில் அறநெறிகள்

***பெ.செல்வராணி** - 1

2. பழமொழி நானூற்றில் ஈகை

***சு.சரண்யா** - 5

3. தேவதேவன் கவிதைகளில் இயற்கை அறம்

***செ.சோனா கிறிஸ்டி** - 9

4. முத்தொள்ளாயிரத்தில் பாண்டியன் பற்றிய பாடல்களில் அறச்சிந்தனைகள்

***முனைவர் இரா.இளவரசன்** - 12

5. சங்க இலக்கியத்தில் வாழ்வியல் அறம்

***அ.சவரிராயம்மாள்** - 16

6. வள்ளலார் வலியுறுத்தும் அறம்

***வி.எஸ்.ராஜேஸ்வரி** - 19

7. ஜோதிர்லதா கிரிஜாவின் திருப்புமுனை நாவலில் சமுதாய அறம்

***அ.ச.சண்முகவள்ளி** - 23

8. சங்க இலக்கிய எட்டுத் தொகையில் அறம்

***முனைவர் பு.எழிலரசி** - 27

9. புறநானூற்றில் அறச்சிந்தனைகள்

***முனைவர் க.முரளிதரன்** - 31

10. திருவாய் மொழியில் அறம்

***அ.இரா.அறிவொளி** - 35

# நாஞ்சில் நாடன் புதினங்களில் அறநெறிகள்

***பெ.செல்வராணி,** தமிழ்த்துறை, முனைவர் பட்ட ஆய்வாளர், அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல், அலைபேசி : 93814 43745.

**முன்னுரை**

புலம் பெயர்ந்து அலைந்து திரிந்த ஆதி மனிதன் படிப்படியாய் முன்னேறி நாகரிக நிலையை அடைந்தான். பிறகு தனக்கென தொழில், பண்பு, பழக்கவழக்கம், அறநெறிகள், வாழ்வியல் முறைகளை வகுத்தான். மனிதருள் ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழமுடியும் என அறிந்து குடும்ப உறவுமுறைகளை உருவாக்கினான். குடும்பங்கள் இணைந்து சமூகமாகின. **"மனிதன் ஒரு சமூக பிராணி"** என்கிறார் **அரிஸ்டாட்டில்.** சமூகத்தில் தன்னை மேம்படுத்திக் கொள்ள, ஒற்றுமையுடன் வாழ பல்வேறு சடங்கு சம்பிரதாயங்களையும் வகுத்து வாழ்ந்து வருகிறான். அவற்றுள் நமது வாழ்வின் அறநெறிகளாக உள்ளவை நாஞ்சில் நாடனின் நாவல்களில் காணப்படும் விதத்தை இக்கட்டுரையில் காணலாம்.

**தனிமனித மதிப்புகள்**

**அன்புநிலை**

குடும்ப உறவுமுறைகளில் **தாய்-தந்தை. தந்தை-மகன், தாய்-மகள் பெற்றோர்-பிள்ளைகள்** நிலையில் அன்பு என்பது உணர்வுக் கயிறாக ஒருவரை ஒருவர் ஒருங்கிணைக்கிறது.

**தலைகீழ் விகிதங்கள் - நாவலில்**

சிவதாணு "தன் மனைவி, மகள் மீது கொண்ட அன்பின் காரணமாக, மாமனார் சொக்கலிங்கத்திடமும் மாமியாரிடம்" பல்வேறு மரியாதைக் குறைவுக்கு ஆளாகிறான்.

பல்வேறு போராட்டங்களிடையே, இறுதியில் வேலைக்கிடைத்த பிறகு தன் மனைவியையும் குழந்தையையும் தனிகுடித்தனம் செல்கிறான். **"மாமிசப்படைப்பு" ——நாவலில்** கந்தையாவுக்கு நான்கு மக்கள் மூன்று பிள்ளைகள் முதலில் இறந்தே பிறந்தால் பின்னால் பிறந்த இந்தப் பிள்ளைகள் மீது கந்தையாவுக்கு அடங்காத பாசம் "மக்கா, மக்கா" என்று கொண்டு திரிவான். வெளியே எங்கே போய்விட்டுத் திரும்பினாலும் மடியில் ஒரு பொட்டணம் கட்டாயம் இருக்கும்.

**சாதாரண நாட்களில் கூட, வேலை முடிந்து, குளித்து, திருநீறு பூசி முடிந்ததும், முதல் சொல்லாய் கந்தையா வாயில் இருந்து புறப்படுவது "மக்களே சாப்பிட வாருங்கலே.."** என்பதுதான். அவ்வளவு பாசத்தினாலே, அவர்களை பட்டினி இல்லாமல் பார்க்க பெரும்பாடு பட்டான் என்பதை நாவலின் ஓட்டத்தில் நன்றாக உணர முடிகிறது.

**விட்டுக்கொடுக்கும் பண்பு**

அன்பு மிகுதியால் கையாளப்படும் இப்பண்பு, குடும்ப உறுப்பினர்களிடையே மட்டுமின்றி நண்பர்களிடமும் இப்பண்பு தழைத்தோங்க வேண்டும்.

தலைகீழ் விகிதங்களில், ஆசிரியர், சிவதாணு தனது குடும்ப நலனுக்காக தனது சுய மரியாதையை விட்டுக்கொடுக்கும் பண்பாளனாக சித்தரிக்கப்பட்டுள்ளான்.

தன்னை மாப்பிள்ளைப் பார்க்க வந்தபோது. **"தன்னை மாட்டுச்சந்தையில் மாடுபார்க்க வந்ததுபோல்" உணர்ந்து மனவேதனை அடைந்தான்.** ஆனால் அப்பா, அம்மா, குடும்ப உறவுகளுக்காக பணக்கார வீட்டின் மாப்பிள்ளையாக சம்மதிக்கிறான். இதனால் பல்வேறு இன்னல்களை இடிபோல் தாங்குகிறான்.

**சுயமரியாதை**

**"என்பிலதனை வெயில் காயுமே"** நாவலில் சண்முகம் வேலைசெய்யும் இடத்தில் சம்பள உயர்வை எதிர்நோக்கி காத்திருக்கும் நேரத்தில் தன்னை விட உயர்நிலையில் உள்ள அதிகாரி வேலையில் சம்பள உயர்வு இல்லை மற்றும் வேலையே நிரந்தரம் கிடையாது என்று கூறினார். இதனால் மனமுடைந்த சண்முகம் சோர்வுற்றான். இதனை கண்ட உயர் அதிகாரி, சலுகை பணமாக கொடுக்க முன்வருகிறான். வேண்டாம், **எனது உழைப்பை மீறிய பணம் சலுகையால் வேண்டாம் என உதறித் தள்ளிவிட்டு விறுவிறு என எழுந்துச் செல்கிறான்.** இதன்மூலம் **வறுமையில் சுயத்தை மீட்டெடுக்கும் பாங்கு** கதையில் புரிகிறது.

**சமுதாய மதிப்புகள்**

**ஒருமைப்பாடு**

சமூகத்தின் ஒருமைப்பாட்டிலேயே ஒரு கிராமம், நாட்டின் வளர்ச்சி உள்ளது. "மாமிசப்படைப்பு" நாவலில் கந்தையா, தனது சமூகத்தைச் சேர்ந்தவர்களை முன்னேற்றுவது குறித்து யோசித்து கொண்டே இருப்பான்.

**"கோட்டைக் கடன் கொடுத்தே தனது கோட்டையை வலுவாக்கிக்கொள்ள பண்ணையார்கள் அங்கு உண்டு. பணயம் வைக்க ஏதுமற்றவர்களுக்கு வேறு வழி இல்லை? இந்நிலையில் கந்தையாவுக்கு அந்த யோசனை தோன்றியது.**

**ஊரின் மேற்குத் தலைமாட்டில் இலுப்பாற்றின் மேலக்கரையில் சுடுகாட்டுத் தோப்பு" உபயோகமற்றுக் கிடக்கும் இந்த ஆற்றுப் புறம்போக்கு நிலத்தை வெட்டித் திருத்தி காய்கறித் தோட்டம் போட்டால் என்ன? அன்று இரவு கந்தையா குழுவின் ஆட்களிடம் கூட்டம் கூடி திட்டத்தினைத் தெளிவாக்கினான்.**

மறுநாள் காலை ஆறரை மணிக்கெல்லாம் அவரவர் வீட்டிலிருக்கும் குப்பை, மண்வெட்டி, வெட்டுக்கத்தியுடன் சுடுகாட்டுத் தோப்பில் **இலங்கைக்குப் பாலம் போடும் வானரக் கூட்டம் போல்** பார்ப்பவர் கண்களில் ஓர் ஆச்சரியம், செடிகளை வெட்டி வேலி அமைத்து தோட்டமாக்கினர். அதில் அனைவரும் இணைந்து பாடுபட்டனர், விதைப்பு முடிந்த பிறகு காவலுக்கு ஆள் போடப்பட்டது. இவ்வாறு தன்னுடன் சேர்ந்த தன் இனத்தவரையும் முன்னேற்றும் சக்தி படைத்தவனாய் கந்தையா உள்ளான் என அறிகிறோம்.

**சகிப்புத்தன்மை**

**"என்பிலதனை வெயில் காயுமே"** நாவலில் தாத்தா, பாட்டியின் ஆதரவில் வாழும் சொடலையாண்டி, **மழை வெள்ளத்தால் தான் வீடு திரும்ப வழியின்றி தவிக்கும் சூழலில் ஒரு பட்டதாரி இளைஞன் படும் பாட்டை அறிய முடிகிறது. புத்தகப்பையை ஆற்றில் நீந்தும் போது நனையாமல் வைக்க அவன் செய்யும் முயற்சியும், இரவு முழுக்க படித்துறையில் குளிரில் காத்துக் கிடந்த பரிதாபமும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.**

இவ்வளவுத் துன்பத்திலும் கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்ற முனைப்பு, உணவில்லையென்றாலும் தண்ணீர் அருந்திக்கொள்ளும் ஏழ்மையை சகித்துக் கொண்டு வாழும் மனப்பக்குவத்தை பெற்றவனாக சண்முகம் உள்ளான்.

**நம்பிக்கை நிலை**

நாஞ்சில் நாட்டு வழக்க முறைகளை தனது நாவல்களில் முழுமையாக படம் பிடித்தது போல் ஆசிரியரின் படைப்புகள் உள்ளன.

**வாழ்வியல் நம்பிக்கை**

என்பிலதனை வெயில்காயுமே, தலைகீழ் விகிதங்கள், மிதவை ஆகிய நாவல்களில் படித்துவிட்டு வேலைக்காக விண்ணப்பித்துக் கொண்டு கிடைத்த வேலைகளைச் செய்யும் இளைஞர்களின் முயற்சி பாராட்டுக்குரியதாக ஆசிரியர் கூறியுள்ளார்.

நண்பனை, நம்பி வந்து பட்டனத்தில் போராடும் சண்முகம், பெரியப்பா வீட்டிற்கு சென்றால், ஏன் தொந்தரவு என கருதி நண்பனுடன் தங்குகிறான். ,**வேலைத் தேடி தேடி கம்பெனி, கம்பெனியாக அலைந்து திரிகிறான். ஒவ்வொரு நாளும் மனச்சோர்வின்றி தேடிச் செல்லும் விதம் நம்பிக்கை என்னும் மூன்றாவது "கை" காட்டுகிறது.**

**சிவதாணு - வேலைக்கு முயற்சிக்கையில் ஏளனம் பேசிய ஊர்மக்கள், மாமியார் வீட்டின் மருமகன் என ஏசிய மக்கள் இவற்றிடையே ஒளிபிறக்கும் என தன் வாழ்வை நோக்கி விடாமுயற்சியுடன் பயணித்த சிவதாணு ஒரு சிறந்த நம்பிக்கைக்கு உதாரணம் ஆகும்.**

**இறை நம்பிக்கை**

**உடல், பொருள், ஆவி அத்தனையும் அவன் செயலே. "அவனின்றி ஒரு அணுவும் அசையாது" என்பர்.**

**"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி.. .**

திருநாவுக்கரசர் - பாடல்.

இப்படி எல்லாவுமாகி நிற்கும் இறைவனுக்கு செய்யும் பூசைகளில் நாஞ்சில் நாட்டு மக்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதனை அறிய முடிகிறது.

**"மாமிசப்படைப்பு" நாவலில் முத்தாரமனுக்கு கொடை நிகழ்வு.**

முத்தாரம்மனை தங்கள் வாழ்வின் ஓர் பிரதானமான அங்கமாக எண்ணிக் கொண்டு........ **தங்களின் நோய்களை நிவாரணம் செய்வதாக, கன்றுகாலிகளை காப்பாதாக, அச்சம் தவிர்ப்பதாக, சுகதுக்கங்களின் உடன் இருந்து ஆதரவும் அன்பும் காட்டுவதாக நம்பினர்.**

மாங்கோணத்தில் வீட்டுக்கு வீடு ஒரு முத்தம்மாள் அல்லது பகவதியம்மாள் இருந்தாள்.

கொடையின் போது, நாதசுரம், தவில், முரசுகள் சேர்ந்து முழங்கின, ஊடே வில்லுப்பாட்டு வரிகள் ஆராசனை நெருங்கும் துடிப்பு ஓசைகளில் தெரிந்தது.

**மக்களுக்கும், தெய்வங்களுக்கும் இடையே திரைபிடித்து வாய்கட்டி மூச்சடக்கி, சூலை பிடாரிக்கும், சந்தனமாரிக்கும் மாமிசப் படைப்பு போடுகையில் எழுந்த மணம் கோயில் முழுவதும் நிறைந்தது. இவ்வாறு மக்களின் இறை உணர்வு மேலோங்கியுள்ளது** இக்கதையில்.

## முடிவுரை

நாஞ்சில் நாட்டு மக்களின் வாழ்வியல் நம்பிக்கை முறைகளை படம் பிடித்து காட்டுவதாய் ஆசிரியரின் எழுத்துகள் அமைந்துள்ளது.

மனிதன் நம்பிக்கையின் நவரசமாய், அன்பின் அகிலமாய் சமூகத்தின் தோழனாய் இறை ஈடுபாட்டுடன் வாழ்வதே முழுமையான வாழ்வாக நம்மால் அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள் - நாவல்கள்**

- தலைகீழ்விகிதங்கள்
- என்பிலதனை வெயில் காயுமே
- மாமிசப்படைப்பு
- மிதவை

# பழமொழி நானூற்றில் ஈகை

*சு.சரண்யா, ஆய்வியல் நிறைஞர், (முழுநேரம்), தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-11.

கொடை, அறம், பிறருக்கு உதவுதல், என்பவைகளை பண்டைத் தமிழர்கள் தமது கடமையெனக் கருதி வந்தனர். அவர்க்கு இன்னது செய்தால் நமக்கு இன்னபலன் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் அவர்கள் செய்யவில்லை. அப்படி செய்தாலும் அது அறமாகாது. கொடையானது நம் முன்னோர்களின் கொள்கைகளில் ஒன்றாக இருந்துள்ளது. இக்கொள்கையுடன் பிறரைப் பேணி, வாழ்ந்தவர்களை வள்ளல்கள், கொடையாளிகள் என்று கூறுகின்றனர். இந்நூலின் ஆசிரியரான முன்றுரை அரையனார் கூறும் ஈகை குணத்தை பற்றி காணலாம்.

**கொடுத்து உதவுதல்**

இல்லாதவர்களுக்கு கொடுப்பதால் நாம் என்றும் குறைவது இல்லை. நாம் தேடிப் பாதுகாப்பாக வைத்த செல்வம் நமக்கு ஆபத்தான காலத்தில் உதவும் என்று நாம் நினைத்துவிட கூடாது. அப்படி ஆபத்தான காலத்திலும் அந்த பெரும்பணம் பயனின்றியும் போகலாம். அப்பணத்தை தானும் அனுபவித்து மற்றவர்களுக்கும் கொடத்து வாழவேண்டும். அப்படி கொடுத்து வாழ்வதின் மூலமாக நமக்கு நெறுக்கடி ஏற்பட்ட காலத்தில் மற்றவர்கள் நமக்கு தானாகவே முன் வந்து உதவுவர் என்பதை,

**"தக்குழி நோக்கி அறஞ்செய்யின், அஃதன்றோ**
**எய்ப்பினில் வைப்பெண் பது"[1]**

என்ற பாடலின் மூலம் தெளிவாகிறது.

நம்மிடம் பொருளை கேட்டு வருபவர்களுக்கு அவர்களுக்கு எவ்வளவு பொருள் தேவை என்பதை அறிந்து கொடுப்பவர் கொடை தன்மையை அறியாதவர். நம்மிடம் எவ்வளவு பொருள் உள்ளது. தம்மால் எவ்வளவு பொருளை இரப்பவர்களுக்கு கொடுக்க முடியுமோ அவ்வளவையும் கொடுக்க வேண்டும் என்பதை,

**"இரவலர் தம் வரிசை என்பார் மடவார்**
**கரவலராய்க் கைவண்மை பூண்ட"[2]**

என்ற முன்றுரை அரையனார் வழியாக உணரமுடிகிறது. இதனை மேலும்,

**"ஆற்றும் துணையால் அறம் செய்கை முன் இனிதே"[3]**

இதன் மூலமாகவும் அறியமுடிகிறது.

மகாபாரதத்தில் அர்ஜுனன். கண்ணனிடம் கர்ணனை மட்டும் புகழ்கின்றனர். ஆனால் எங்களை கொடையாளன் என்று யாரும் கூறுவதில்லை. அதற்கு என்னக் காரணம் என்று கேட்டான். கண்ணன் அர்ஜுனன், கர்ணன் இருவரையும் அழைத்து இருவருக்கும் இரண்டு மலைகளை கொடுத்தார். இந்த இரண்டு மலைகளையும் மக்களுக்கு முதலில் யார் பிரித்து கொடுக்கிறார்களோ அவர்களையே இவ்வுலகம் சிறந்த வள்ளல் என்று போற்றும் என்றார். அந்த மலையை அர்ஜுனன் சிறுசிறு பகுதிகளாக பிரித்து கொடுத்தான். கர்ணன் ஒருவரை அழைத்து ஒரு மலையை அப்படியே கொடுத்துவிட்டார். இதுவே உங்கள் இருவருக்கும் உள்ள வித்தியாசம் என்று கூறினார்.

நம்மிடம் உள்ள பொருளை மற்றவர்களுக்கு கொடுத்து உதவுதல் இனிது என்பதை,

**“- - - பொருளின்**

**தோகை இனிது - - - “[4]**

என்ற பாடலின் மூலமாக உணரமுடிகிறது.

பலன் கருதிப் பணிசெய்பவர்கள் தியாகிகள் என்ற கூறுவது இல்லை. உள்ளத்திலே தன்நலமின்றி உல கநன்னைகாக உழைப்பவர்களே தியாகிகள் என்று கூறுவோம். வெறுப்பு விருப்பின்றி நன்மையிலே நாட்டம் செலுத்தி உழைப்பவர்களே உண்மையான தியாகிகள். ஈகை செய்பவர்க்கு கொடுக்கும் மனம் இருந்தால் போதும், சிறிய பொருளாக இருந்தாலும் பெரிய பயனை தரும். சிறிய அயிரை மீனை பிடிக்க போட்ட தூண்டிலில் பெரிய வாரல் மீனே வந்து மாட்டிக்கொள்ளும் இதனை,

**“சிறிய பொருள் கொடுத்துக் செய்தவினையால்,**

**பெரிய பொருள் கருது வாரே”[5]**

என்ற பாடலடிகள் மூலம் தெளிவாகிறது.

ஒருவர் தம்மிடம் பொருள் இல்லாத நிலையில், வறியவர்கள் வந்து கொடை கேட்கும் போது சிறிய பொருளாக இருந்தாலும் கொடுத்து உதவும் மனம் இருந்து கொடுத்தவருக்கு சொர்க்கத்தில் உள்ள கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும் இதனை,

**“இல்லா இடத்தும், இயைந்த அளவினால்**

**- - - - -**

**கொடையோடு பட்ட குணனுடை மாந்தர்க்கு**

**அடையாவாம் ஆண்டைக் கதவு”[6]**

என்ற நாலடியின் மூலமாக உணரமுடிகிறது. மேலும் கொடுக்கும் பொருள் சிறியதாக இருந்தாலும் அதனால் வரும்பயன் மலையளவு உடையது என்பதை,

**“- - - - சிறிது எனினும்**

**குன்றுபோல் கூடும், பயன்.”[7]**

என்ற பாடலடியின் மூலமாக புலனாகிறது.

ஒருவன் தன்னால் கொடுக்க முடிந்த ஒன்றை கொடுத்து உதவலாம். கொடுக்க முடியாததை இல்லை என்று சொல்லிவிடலாம். அதனால் பழி எதுவும் வந்து சேர்வது இல்லை. அதுவே உலக மக்களின் இயல்பு. அவ்வாறு இல்லாமல் கொடுத்து உண்ணவேண்டும். அதை விடுத்த பகுத்து உண்ணாமல் ஒருவன் தானே தனித்து உண்டால் அதுபெரும்பழி வந்துசேரும் இல்லாதாரை கொடுப்பது போல நம்பவைத்து அலைய வைப்பது குற்றம் என்பதை,

**“இசைவ கொடுப்பதூஉம் இல்லென் பதூஉம்**

**வசையன்று வையத்து இயற்கை”[8]**

மேலும்,

**“ஒற்கப்பட்ட ஆற்றார் உணர உடைத்தபின்**

**நற் செய்கை செய்வார்போல் காட்டி” [9]**

என்ற பழமொழி பாடல்களின் மூலமாக தெளிவாகிறது. பிறரை நம்பவைத்து பின்னால் காலை வாரிவிடுவதல், அவருக்கு செய்யும் துரோகம் என்பது நம்மால் உணரமுடிகிறது.

ஒருவரிடம் எந்த ஒரு விஷியத்தையும் கொடுக்கின்றேன். கொடுக்கவில்லை என்று கூறிவிட வேண்டும். காலத்தை கடத்தகூடாது. மதுரைக் குமரனார் என்பவர் ஒரு புலவர். இவர் பெருந்திருமாவளவன் என்றும் சோழனிடம் பரிசு பெறச் சென்றார். அவன் இப்புலவரை வரவேற்றுப் பரிசில் தரவில்லை. சிறிது காலங்கடத்தினான். அதைப்பொறாத புலவர் அவன் முகத்தில் அறைந்தது போல் பாடினார்.

“யாம் மிகப் பெரிய துன்பத்தை அடைந்தாலும் சிறிதும் மதியற்றவர்களின் செல்வத்தை மதிக்கமாட்டோம். நல்லறிவாளர்களின் வறுமையையே வளமுடையதாக மதிப்போம்.

**மிகப் பேர் எவ்வம் உறினும், எனைத்தும்**
**உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்**
**நல்லறி வுடையோர் நல்குரவு**
**உள்ளுதும்”[10]**

என்பதன் வழியாக புலனாகிறது.

கொடுப்பவரின் கை எப்போதும் உயர்ந்தே இருக்கும், வாங்குபவரின் கை கொடுப்பவரின் கையின் கீழ்தான் இருக்கும். அதன் மூலமாக கொடுப்பவர் குறைந்து போவது இல்லை என்பது உணரமுடிகிறது.

**கஞ்சனின் செல்வம்**

கருமித்தனம் உள்ளவரிடம் இருக்கும் செல்வம் பயனில்லாதது. அவனிடம் நிறைய செல்வம் இருந்தாலும் மற்றவர்களுக்கு கொடுக்கமாட்டான். அவனும் அனுபவிக்கமாட்டான். ஒரு நாய்க்கு கிடைத்த தேங்காயால் அதற்கு எந்தவிதமான பயனும் இல்லை. அந்த தேங்காயை மற்றவர்களுக்கும் கொடுக்காது. இதனை போலத்தான் கருமிகள் என்பதை,

**“பெற்றாலும் செல்வம், பிறர்க்கு ஈயார், தாம் துவ்வார்”[11]**

என்ற வரிகளும்,

**“வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற**
**முழங்கு முரசுடைச் செல்வம், - தழங்கு அருவி**
- - - - -
**நாய் பெற்ற தெங்கம் பழம்”[12]**

என்ற பழமொழியின் வழியாகவும் உணரமுடிகிறது. மேலும்,

**“கொடுத்தாலும் துய்த்தாலும் தேற்றா இடுக்குடை**
**உள்ளத்தான் பெற்ற பெருங் வெல்வம்”[13]**

என்ற நாலடியார் பாடலின் வழியாக புலனாகிறது.

கருமித்தனம் உள்ளவர்கள் தன்னை பெற்றெடுத்தவர்கள், உடன்பிறந்தவர், உறவினர் என இவர்களுக்கு எதேனும் உதவி தேவைப்படும் போது கஞ்சனின் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டாலும் எதுவும் செய்யமாட்டான். உடம்பில் இரத்தகாயம் வருமளவு அடிகொடுத்தால் மட்டுமே கருமிகள் கொடுப்பர். என்பதை,

**“இரணம் கொடுத்தால் இடுவர், இடாரே,**
**சரணம் கொடுத்தாலும் தாம்”[14]**

என்ற நல்வழிப் பாடலடிகள் மூலமாக தெளிவாகின்றது.

நம்மால் பிறருக்கு கொடுக்க முடிந்ததை கொடுத்துவிட வேண்டும். நம்மால் முடிந்ததை கொடுக்காமல் மறைத்து வைத்தல் கொடுமை என்பதை,

**“இயைவது கரத்தலின் கொடுமை இல்லை”[15]**

என்ற வரிகளும்,

**“இயல்வது கரவேல்”[16]**

என்று ஔவையார் கூறுவதன் மூலமாகவும் அறியமுடிகிறது.

பனை மரமானது யாருடைய முயற்சியும் இல்லாமல் தனியாக வளர்கிறது. வளர்ந்த பின்னர் தன்னால் இயன்ற உதவிகளை தருகிறது. அதனால் குறிப்பறிந்து கொடுக்கும் உத்தமர்களை பனைமரம் போன்றவர்கள். தென்னை மரமோ நீர் ஊற்றி பாதுகாத்து வளர்த்த பின்னரே உதவுகிறது. அதனால் தென்னை பிறர்கேட்டு கொடுக்கும் தன்மை உடைய மத்திமர்கள் என்று கூறுகிறது. இதனை,

**“உத்தமர்தா மீயுமிடத்தோங்குபனை போல்வரே**
**மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே”[17]**

என்ற நீதிவெண்பாவின் வழியாக புலனாகிறது.

## முடிவுரை

ஈகைக் குணம் உடையவர்கள், ஊருணி நீர் அனைவருக்கும் பயன்படுவதுபோல அனைவருக்கும் கொடுத்து மகிழும் மனநிலை உடையவர்களாவர். தம்மிடம் பொருட் செல்வம் மிகுந்திருந்தால் அதனைத் தான் மட்டும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு வாழ்வதை விட்டுவிட்டு, பூமியில் வாழ்கின்ற நாட்கள் குறைவு என்பதை மனதில் கொண்டு அறச் செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை பழமொழி வழியாக அறியலாம்.

## சான்றெண் விளக்கம்


1. ச.வே.சுப்பிரமணியன், பதி.கீழ்.நூல், பழ. பா-37
2. மேலது, பா-381
3. ச.வே.சுப்பிரமணியன், பதி.கீழ்.நூல், இனி.நா. பா-6
4. ஞா. மாணிக்கவாசகன், நான். பா-36
5. ச.வே.சுப்பிரமனியன், பதி.கீழ்.நூல், பழ. பா-302
6. தி.சு. பாலசுந்தரம் பிள்ளை, நாலடி, பா-10:1
7. ஞா. மாணிக்கவாசகன், சிறுபஞ்ச, பா-63
8. ச.வே.சுப்பிரமணியன், பதி.கீழ்.நூல், பழ. பா-24
9. மேலது, பா-283
10. சாமி. சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப-219
11. ச.வே.சுப்பிரமணியன், பதி.கீழ்.நூல், பழ. பா-107
12. மேலது, பா-283
13. தி.சு. பாலசுந்தரம் பிள்ளை, நாலடி, பா-28-4
14. ஆ. வாண்டுமாமா, நீதிநெறி நூல்கள், நல்வழி, பா-18
15. தி.சு. பாலசுந்தரம், முது.காஞ்சி, பா-6:5
16. கதி. முருகேசன், நீதிகளஞ்சியம், ஆத்-3
17. அ.பு. அறவாழி, நீதி நூல்கள் தொகுதி-2, நீதிவெண்பா, பா-92

# தேவதேவன் கவிதைகளில் இயற்கை அறம்

***செ.சோனா கிறிஸ்டி,** உதவிப்பேராசிரியர், தி.தெ.மா.நா.ச.கல்லூரி, தெற்கு கள்ளிகுளம். அலைபேசி : 7598110970.

**முன்னுரை**

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என மானுடப்பிறவியின் உயர் சிறப்பினை ஔவையார் தெளிவாக கூறியுள்ளர். கிடைத்தற்கரிய இந்த மானிடப்பிறவியில் பிறந்தும் வாழ்ந்தும் இறந்தும் பல நிலைகளில் உழன்று கொண்டிருக்கும் மனிதன் பலவிதமான வாழ்வியல் அறங்களைக் கடைபிடித்து வாழவெண்டும். ஆறாவது அறிவாகிய மனஉணர்வு என்பது மனித இனத்திற்கே உரித்தானது. இம்மனித மனமானது நிலைபேறுடைய அறங்களை கடைபிடிக்கும் போது தான் சமூகத்தில் தனக்கென ஒரு இடத்தையும் சிறப்பையும் பெறுகின்றது.

**கவிஞரைப் பற்றி**

நவீனதமிழ் கவிஞர்களில் தனித்துவம் மிக்கவர் கவிஞர் தேவதேவன். இயற்கையின் மீது அபரிமிதமான காதல் கொண்டவர். இயற்கையின் வாயிலாக மானுடத்திற்கு அறக்கருத்துகளை அறிவுறுத்துபவர். இவருடைய கவிதைகள் 30 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. கவிதை ஒரு சொல் விளையாட்டோ, வெறும் அழகியல் மந்திரமோ அல்ல; அது தன்னுள் கொண்டிருக்கும் இலட்சியம் அபிரிமிதமானது என்கிறார் தேவதேவன்.

**இயற்கை அறம்**

கவிஞர் தேவதேவன் இயற்கையிலிருந்து அறமும் கருணையும் வெளிப்படும் தருணங்களையே தொட்டு எடுக்கிறார். இயற்கையின் மகத்தான ஒழுங்கு, அழகு, குரூரம், கருணை ஆகியவற்றை அறிந்து அதன் முன் மானுட வாழ்வை நிறுத்தி பரிசீலிக்கிறார்.

மாதம் மும்மாரி பெய்த காலம் மாறி இன்று வானம் பார்த்த பூமியாக உள்ளது. இதற்கு மனித வாழ்வியலே காரணம். மனிதன் வேளாண்மை செய்வதை விடுத்து, விளைநிலங்களில் கட்டிடங்களைக் கட்டி வாடகை எனும் பெயரில் இருந்த இடத்திலிருந்தே சம்பாதிக்க விரும்புகின்றான். இயற்கையோடு இயைந்த வாழ்வை மறந்து வருகின்றான். மரம் செடி கொடிகளிடம் இருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. என்பதை,

**அதோ அந்தத் தாமரை இலையைப் பாருங்கள்**
**அனைத்து வறுமைகளுக்குமான**
**மூலகாரணத்தைக் கண்டுவிட்ட தீர்க்கதரிசியும்**
**அசாதாரணமான செயல்வீரனும்போல்**
**தானே ஒரு பிட்சா பாத்திரமாக மேலெழுந்து (மழைநீர் சேகரித்தல் ப.710)**

தாமரை இலை நீரின் அளவிற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் திறன் படைத்தது. அது வறுமைக்கான மூலகாரணத்தை கண்டு கொண்ட தீர்க்கதரிசி போல, செயல் வீரனாக மாறி பிட்சா பாத்திரமாக மேலெழுந்து மழை வேண்டி அசைகிறது. நீரின் இன்றியமையாமையைத் தெரிந்து நீரிலே தன் வாழ்வை அமைத்துக் கொண்ட ஓர் உயிர்.

**அதற்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது**
**மழை என்பதும் மழைநீர் சேகரித்தல் என்பதும்**
**காலத்தின் அழுக்கினைப் போக்குவதும்**
**பூமியினைப் பேணுவதுமான**
**ஒரே செயல் தான் (மழைநீர் சேகரித்தல் ப.710)**

இப்பூமியெங்கும் தலை உயரத் தண்ணீர் தாங்கிகளாகவும் ஏங்கிகளாகவுமே நின்று கொண்டிருக்கும் தாவரங்களைப் பார்த்து நாம் திருந்திக் கொள்ள வேண்டிய வேளை இது.

மழை என்பதும் மழைநீர் சேகரித்தல் என்பதும் உள்ளார்ந்த அன்பின் வெளிப்பாடு என்று கவிஞர் தேவதேவன் மழைநீர் சேகரிப்பு எனும் நல்ல செயலின் முக்கியத்துவத்தை தன் கவிதை மூலம் உணர்த்தியுள்ளார்.

**மந்திரவாள்**

பூத்துக்கொண்டிருப்பதில் மரம் சோர்ந்து போய்விட்டதா? அன்பு தரும் பேரன்பச் சுவையை மனிதர்கள் மறந்துவிட்டனரா?. உலகைச் சதா புதுப்பித்துக் கொண்டிருக்கும் தாய் வயிறுகள் தாம் மூடிக் கொண்டுவிட்டனவா?.

சமூகத்தில் நிலவும் எத்தகைய பேரளவான மடமையான செயல்களாக இருந்தாலும் அதை ஒரே வீச்சில் வீழ்த்தி விடக்கூடிய மந்திரவாளாகிய எழுதுகோல் தன் கையில் இருந்தும் மனிதன் துயரில் அழுது செத்துக் கொண்டிருப்பதேன்? என விழிப்புணர்வூட்டும் கேள்வியை கேட்கின்றார் கவிஞர் தேவதேவன்.

**இது வேடிக்கையல்லாமல் வேறென்ன,**
**எத்தனை பேரளவான மடமைகளையும்**
**ஒரே வீச்சில் வீழ்த்திவிடக்கூடிய**
**மந்திரவாளொன்று தன் கையிலிருந்தும்**
**மனிதன் துயரில் அழிந்து செத்துக்கொண்டிருப்பது? (தேவதேவன்கவிதைப.627)**

என்று கேள்வி எழுப்புகின்றாா. மேலும்,

**ஏழையென்றும் அடிமை யென்றும்**
**எவனும் இல்லை ஜாதியில்,**
**இழிவு கொண்ட மனித ரென்பது**
**இந்தி யாவில் இல்லையே**
**வாழி கல்வி செல்வம் எய்தி**
**மனம் கிழ்ந்து கூடியே**
**மனிதர் யாரும் ஒருநிகர்**
**சமானமாக வாழ்வமே! (பாரதி பாடல் - விடுதலை)**

சாதிவேறுபாடு, வர்க்க வேறுபாடு, ஆண் பெண் வேறுபாடு, முதலாளி தொழிலாளி வேறுபாடு என இத்தகைய மடமைகளை தன் எழுத்து மூலம் கண்டித்து உணர்த்தியுள்ளார் பாரதி.

கவிஞர் தேவதேவனும் தன் கவிதை மூலம், மனித குலம் பெருமை கொள்ள மடமை நீங்கியாகணும், அதற்கு கவிஞர்கள் தம் மந்திரவாளாகிய பேனாவை கையில் எடுத்து சமூகத்தில் நல்லதொரு மாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்கிறார்.

**அகழி**

‘அகழி’ தேவதேவனின் முக்கியமான நீள்கவிதை. அப்பெயர் சுட்டுவது போல அது நவீனக் கலாச்சாரத்திற்கும், பிரபஞ்சவெளிக்கும் இடையேயான இடைவெளியையே சுட்டுகிறது.

**வீட்டுக்கட்டிடத்தின் அழகிய தோற்றத்தை**
**மறைக்கின்றன என**
**வெட்டப்பட்டன மரங்கள் (அகழி)**

மரங்களைச் சுற்றி வீட்டைக்கட்டும் கலாச்சாரம் வீட்டைச்சுற்றி மதில்களையும் அதைச் சுற்றி அகழிகளையும் வெட்டுகிறது. அகழியில் முதலைகள் விடப்படுகின்றன. அவற்றுக்கு மாமிசம் வேண்டியுள்ளது. அகழிக்குள் கொழுத்து வளர்ந்து வெளியேறத் துடிக்கின்றன முதலைகள்.

மனிதனுக்கும் மனிதனுக்குமான அகழி தான் மனிதமனம். மனிதமனமென்னும் அகழிக்கும் மனித வாழ்வுக்கும் இடையே தான் அப்பெரும் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றுள் மரங்கள் வெட்டப்பட்ட வீடுதான் மனித கலாச்சாரம்.

**ஓர் ஆகாயப் பார்வையில்**
**இம் மனிதக் குடியிருப்புகளின்**

**சிறுமைத் தோற்றம் கண்டு**
**அலட்சியமாக ஒதுங்கி**
**தன் வியன் சிறகசைத்து**
**வெளியில் உலாவந்த பறவை (அகழி)**

மரங்களற்ற ஊரிலிருந்து பறவைகள் பறந்து சென்றுவிட்டன. அவை மண்ணுக்கு வரும் போது மனிதர்கள் சுட்டு வீழ்த்துகின்றனர். ஏனெனில் அவை தாண்டக் கூடாத அகழியைத் தாண்டுகின்றன சுடப்பட்ட பறவைகளை அகழி முதலைகள் உண்கின்றன.

இக்கவிதையில் அகழி மனிதர்களின் விதவிதமான சித்திரங்களை காட்டுகின்றது. 'சூரியக்கிரணங்களால் கூட தொட முடியாத உயர்குடிகள்', 'பன்றிகள் கிளறும் சாக்கடைத் தெருவில் தன் மூன்றடி முற்றத்தை மட்டும் துடைத்து மெழுகிக் கோலமிட்டு அழகு பார்க்கும் 'கற்புள்ள ஸ்திரீகள்','இனமும் மதமும் மொழியும் நாடுகளும் செய்யும் போரில் பிணம் தின்று கொழுக்கும் முதலைகள் உறுமி நீந்தும் அகழி' என்று கவிதை நீள்கிறது.

கான்கிரீட் சுவர்களுக்குள் வழிதவறி வந்துவிடுகிறது ஒரு பட்டாம்பூச்சி சுவர் முதலைகள் அதை உண்டுவிடுகின்றன. அக்கொடிய நகர் மீது அப்போதும் வானம் கருணையோடு இருக்கின்றது. சகல மலினங்களையும் கழுவிச் செல்கிறது மழை.

**நிறைவாக**

கண் கூடாக நம் எதிரே இருக்கும் இயற்கை வெளிதான் மெய்மை. இயற்கையைக் கண்டுகொள்ளுதலும் அதன் அருமை உணர்ந்து பேணுதலும் வேண்டும். இந்தப் போக்கில் தான் நாம் நிகழ்கால வாழ்வையும் பிரச்சனைகளையும் நாம் மேற்கொள்ள முடியும்.

எதிர் காலத்தைக் கூறுபவனது வார்த்தைகளை மக்கள் பொதுவாக நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்வதைப் போலவே அவனது வாரிசான கவிஞனது சொற்களும் மக்கள் மனதில் ஓர் எழுச்சியையும் கிளர்ச்சியையும் உண்டாக்குகின்றன.

# முத்தொள்ளாயிரத்தில் பாண்டியன் பற்றிய பாடல்களில் அறச்சிந்தனைகள்

***முனைவர் இரா.இளவரசன்,** தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பென்னாகரம் - 636 803.

**முன்னுரை**

செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றாகத் திகழக்கூடிய முத்தொள்ளாயிரம் சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றி திறம்பட எடுத்துரைக்கிறது. இந்நூலை இயற்றியவர் யார் என்று தெரியவில்லை. மொத்தமாக 109 பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றில் 57 பாடல்கள் பாண்டியனைப் பற்றியதாகக் காணப்படுகின்றன. அப்பாடல்கள் எவ்வாறான அறச்சிந்தனையை எடுத்துரைக்கிறது என்பதினை இக்கட்டுரையின் வழி காண்போம்.

**அறம்**

நற்சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் அறம் என்று கூறலாம். கௌரா தமிழ் அகராதி, 'அறம்' என்ற சொல்லிற்கு 'கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை' என்று பல பொருள்களைச் சுட்டுகின்றது. இவ்வாறான அறச்சிந்தனைகள் பாண்டியன் பற்றிய பாடல்களில் எவ்விதம் அமைந்துள்ளன என்பதனைக் காண்போம்.

**போர் அறம்**

பழங்கால இலக்கியங்கள் போர்முறைகளையும் போர் பற்றிய அறச்சிந்தனைகளையும் பெரிதும் தாங்கி நிற்கின்றன. முத்தொள்ளாயிரம் போர் செய்யும் முறைபற்றி குறிப்பிடும்போது,

**"பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பால்காய்தி**
**திறை முறையின் உய்யாதார் தேயம் - முறை முறையின்**
**ஆன்போய் அரிவையர்போய் ஆடவர்போய் ஆய்ஈன்ற**
**ஈன்பேய் உறையும் இடம்" - முத்தொள்ளாயிரம்,106.**

என்கிறது. இவற்றின்வழி போரின் முன்பு முறையாக பறை அறிவிக்கப்படும் என்றும் பின்பு அந்நாட்டின் பசுக்கள், பெண்கள் நாட்டைவிட்டு அகற்றப்பட்டு போர் செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது. இவற்றில் பசுக்களும் பெண்களும் பாதிக்கப்படக்கூடாது என்ற பாண்டியர்களின் போர் அறத்தை அறியலாம். மேலும்,

**"தொழில் தேற்றாப் பாலகனை முன்நிறீஇப் பின்னின்று**
**அழலிலைவேல் காய்த்தினார் பெண்டிர் - கழலடைந்து**

மண்ணிரத்தில் என்ப வயல்குதார் மாமாறன்

கண்ணிரத்தம் தீரக்கு மருந்து" - முத்தொள்ளாயிரம்,108.

என்ற பாடலில் பகைவர்களின் மனைவி போர் தெரியாத பாலகனை முன்நிறுத்தி எங்களை மன்னித்து விடுங்கள் என்று சரணடைய பாண்டியன் போர் புரியமாட்டான். கோபம் தணிந்துவிடுவான் என்று கூறப்படுகிறது. இவற்றின் வழி போர்தெரியாத ஆண்களிடம் போர் புரியக்கூடாது என்பதையும், போர் தெரிந்தவர்கள் பாலகனாக இருந்தாலும் போர்புரியலாம் என்ற போர் அறத்தையும் நன்கு உணரலாம். மேலும்,

"கண்ணார் கதவம் திறமின் களிறொடுதேர்

பண்ணார் நடைப்புரவி பண்விடுமின் - நண்ணாதீர்

தேர்வேந்தன் தென்னை திருவுத்தி ராடநாள்

போர்வேந்தன் பூசல் இலன்" - முத்தொள்ளாயிரம்,93.

என்ற பாடலில் பகைவர்களே வாயிற்கதவுகளைத் திறந்துவிடுங்கள், யானை, குதிரைகளை நடைபயில விடுங்கள் பாண்டியன் திருவுத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவன் இன்று போர்புரியமாட்டான் என்று கூறப்படுகிறது. இவற்றின் வழி பிறந்தநாள் அன்று போர்தொடுக்க மாட்டார்கள் என்ற போர் அறத்தை நன்கு உணரலாம்.

**மகளிர் அறம்**

பெண்கள் பற்றிய அறச்சிந்தனைகளில் பாண்டியர்கள் எவ்வாறாகச் செயல்பட்டுள்ளனர் என்பதைக் காண்போம்.

"ஏனைய பெண்டீர் எரிமூழ்கக் கண்டுதன்

தானையாற் கண்புதைத்தான் தார்வழுதி - யானையெலாம்

புல்லார் பிடிபுலம்பத் தாம்கண் புதைத்தவே

பல்யானை அட்ட களத்து" - முத்தொள்ளாயிரம், 104.

என்ற பாடலில் பகைவர்கள் இறந்ததனால் அவர்களின் மனைவிகள் உடன் கட்டை ஏறுவதைக் கண்டு பாண்டியன் கண்களை மூடிக்கொண்டான் என்றும் அவனைப் போலவே அவனது ஆண் யானைகளும் பகைவர்களின் பெண்யானைகள் புலம்புவதைக் கண்டு கண்கள் மூடிக்கொண்டன என்றும் கூறப்படுகிறது. இதன்வழி பாண்டியனின் கருணை உள்ளத்தையும் மகளிர் அறத்தையும் அறியலாம். அதாவது பெண்களைத் துன்புறுத்தக்கூடாது என்ற அறச்சிந்தனையையும் அவர்கள் துன்புறும்போது தாங்காத மனநிலையையும் நன்கு அறியலாம். மேலும்,

"இருங்களி றொன்று மடப்பிடி சாரல்

இலங்கருவி நீராற் றெளிக்கும் - நலங்கிளர்வேல்

துன்னரும் போர்க்கோதை தொடாஅன் செருக்கின

மன்னர் மதிலாய வென்று" - முத்தொள்ளாயிரம்,109.

என்ற பாடலில் பாண்டியன் பகைவர்களை வென்று மதியையும் மனைவியையும் கைப்பற்றினாலும் அந்தப் பெண்களைத் தொடமாட்டான் என்று கூறப்படுகிறது. இதன்வழி பகைவர்களின் மனைவி தனக்கு உரிமையான போதிலும் அவர்களைத் தொடாத மகளிர் அறத்தினை நன்கு உணரலாம். தொல்காப்பியர்,

**“எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்” - தொல்.கற்பியல்.173.**

என்ற நூற்பாவில் மனைவிகளை வீரர்கள் பாசறைக்கு அழைத்துச் செல்லமாட்டார்கள் என்பதையும், அப்போது புணர்ச்சியில் ஈடுபடமாட்டார்கள் என்பதையும் வலியுறுத்துகிறார். இதன்வழி தொல்காப்பியரின் மகளிர் அறத்தையும் நன்கு அறியலாம்.

**கட்டுப்பாட்டறம்**

கட்டுப்பாடு என்பது சங்ககாலம் தொட்டு இன்றுவரை காலங்காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. முத்தொள்ளாயிரம் எவ்வாறான கட்டுப்பாட்டு அறத்தைச் சுட்டியுள்ளது என்பதைக் காண்போம்.

**“கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்தார் மாறன்**

**முடிபாடி முத்தாரம் பாடித் - தொடிஉலக்கை**

**கைம்மனையில் ஓச்சப் பெறுவெனோ, யானும்ஓர்**

**அம்மனைக் காவல் உளேன்” - முத்தொள்ளாயிரம், 69.**

என்ற பாடலில் சுண்ணப்பொடி இடிக்கும் வாய்ப்புக்கிடைத்தால் பாண்டியனின் கொடி, தேர், முடி, மாலை போன்றவற்றைப் புகழ்ந்து பாடுவேன். ஆனால் என் தாய் என்னை வீட்டுக்காவலில் வைத்துவிட்டாள் என்று ஒரு தலைவி வருத்தப்படுகிறாள். இவற்றின்வழி அக்கால மக்களின் கட்டுப்பாட்டு அறத்தை நன்கு உணரலாம். அதாவது பெண்கள் மற்றவர்களின்மேல் தேவையில்லாமல் ஆசைப்படக்கூடாது என்பதையும் அப்படி மீறினால் வீட்டுக்காவலில் வைத்து மாற்றப்படுவார்கள் என்ற கட்டுப்பாட்டையும் அறியலாம். மேலும்,

**“குடத்து விளக்கேபோல் கொம்பன்னார் காமம்**

**புறப்படா பூந்தார் வழுதி - புறப்படின்**

**ஆபுகு மாலை அணிமலையில் தீயேபோல்**

**நாடறி கௌவை தரும்” - முத்தொள்ளாயிரம்,83.**

என்ற பாடலில் பெண்கள்தனது விருப்பத்தினை குடத்துக்கள் எரியும் விளக்குபோல் மறைத்து வைத்திருப்பர் என்று கூறப்படுகிறது. இதன்வழி பெண்கள் தங்களது விருப்பத்தினை மறைத்துக்கொள்ள வேண்டும். அது மற்றவர் அறியாவண்ணம் இருக்கவேண்டும் என்ற கட்டுப்பட்டு அறத்தினையும் நன்கு உணரலாம்.

**நன்றியறம்**

நன்றி என்பது மனிதப்பண்புகளில் சிறந்த ஒன்றாகக் காணப்படுகிறது. அவ்வாறான நன்றியறத்தை முத்தொள்ளாயிரம் எவ்வாறு குறிப்பிடுகிறது என்பதைக் காண்போம்.

**“காப்படங்கென் றன்னை கடிமனை இல்செறிந்து**

**யாப்படங்க ஓடி அடைத்தபின் மாக்கடுங்கோன்**

**நன்னலம் காணக் கதவம் துளைதொட்டார்க்கு**

**என்னைகொல் கைம்மா றினி” - முத்தொள்ளாயிரம்,53.**

என்ற பாடலில் தலைவியைத் தாய் வீட்டுக்காவலில் வைத்துள்ளாள். அதனால் பாண்டியன் உலா வரும்போது அவனைக் காணமுடியாது தவிக்கிறாள். பின்னர் அவனை சாவி துளை வழியாகக் காண்கிறாள். சாவிதுளை வழியாக என்னைக் காணச்செய்த துளை அமைத்தவர்க்கு நான் என்ன கைமாறு செய்வேன் என்று வருந்துகிறான். இதன்வழி நமக்கு

உதவி செய்வதற்கு நாம் உதவி செய்யவேண்டும் என்பதையும் இப்பெண் கைமாறு செய்யாமல் துன்பப்படுவதையும் நன்கு அறியலாம். இதனையே வள்ளுவர்,

**“செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**

**வானகமும் ஆற்றல் அரிது”** - குறள்.101.

என்கிறார். நானம் உதவி செய்யாது மற்றவர் நமக்கு உதவிசெய்தால் அவர்க்கு நாம் இந்த உலகத்தையும் வானத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது என்கிறார். இதன்வழி நன்றியறத்தை நன்கு அறியலாம்.

**முடிவுரை**

- ❖ கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை போன்றன அறத்தை சுட்டுகின்றன.
- ❖ பாண்டியன் பற்றிய பாடல்களில் 4 விதமான அறச்சிந்தனைகள் காணப்படுகின்றன.
- ❖ போர்அறம், மகளிர்அறம், கட்டுப்பாட்டறம், நன்றியறம் போன்றனவாகும்.
- ❖ போரின் முன்னர் பசுக்களும் பெண்களும் நாட்டைவிட்டு அகற்றப்படுவது போர் அறம்.
- ❖ போர் தெரிந்தவர்களிடம் மட்டுமே போர்புரியவேண்டும். மற்றும் பிறந்தநாள் அன்று போர் புரியாத அறம் காணப்படுகிறது.
- ❖ பெண்களைத் துன்புறுத்தக்கூடாது, துன்புறுவதை தாங்கவும் முடியாது என்ற சிந்தனையின் வழி மகளிர் அறத்தினை அறியமுடிகிறது.
- ❖ பகைவர்களின் மனைவி தனக்கு உரிமையான போதிலும் அவர்களைத் தொடாத மகளிர் அறம் காணப்படுகிறது.
- ❖ பெண்களை வீட்டுக்காவலில் வைப்பதும், பெண்கள் தங்களது விருப்பத்தை அடக்கிவைப்பதும் கட்டுபாட்டறம் என்பதனை அறியலாம்.
- ❖ கைமாறு செய்வது மிகப்பெரிய நன்றியறம்.

# சங்க இலக்கியத்தில் வாழ்வியல் அறம்

*அ.சவரிராயம்மாள், உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை, சுயநிதிப்பிரிவு, தி.தெ.மா.நா.ச. கல்லூரி, தெ.கள்ளிகுளம், திருநெல்வேலி – 627113.

**முன்னுரை**

மனித வாழ்வியலை திறம்பட சித்தரிப்பவை இலக்கியங்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சங்க இலக்கியமான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் மிகச்சிறந்தவையாகும். அக்கால தமிழ் மக்களின் வாழ்வியல் நுட்பங்களையும், வரலாற்றுச் சிறப்புகளையும் அறத்தின் வழியில் புலவர் பலர் பாடியுள்ளனர். மனிதனை அடிப்படையாக கொண்டது அறம். இவ்வுலக வாழ்வு சிறப்பதற்கும் முன்னேற்றம் அடைவதற்கும் அறவாழ்வு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

**அறம் விளக்கம்**

அறம் என்பது மனிதனை இயக்கும் வாழ்க்கை நெறியாகும். நிதானம், பெருந்தன்மை, வாய்மை, கருணை, மனத்தூய்மை என்ற ஐந்தையும் கடைபிடித்து வாழ்வது அறமாகும். கண்ணால் காணக்கூடியது அறம் அன்று. கருத்தால் உய்த்து உணரக் கூடியதுதான் உண்மையான அறமாகும். அறம் என்ற சொல் யாதொரு தீங்கும் இல்லாத நல்ல செயலை குறிப்பதாகும். வாழ்க்கையின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மனிதன் சந்திக்கும் சூழ்நிலையின் வெளிப்பாடாகத் தான் அறம் தன் கருத்தை எடுத்துரைக்கிறது. நல்ல செயல்கள் அனைத்துமே அறமாகும். அறநெறிகள் பலவாகும். அன்பு காட்டுதல், ஈகைப்பண்பு, நன்றியுடைமை, நடுநிலைமை, விருந்தோம்பல், அடக்கம், பொறையுடைமை, ஒழுக்கமுடைமை, அருளுடைமை, மெய்யுணர்தல் போன்றவை குறிப்பிடத்தக்க அறங்களாகும்.

**குடும்ப வாழ்வில் அறம்**

இல்லறமே நல்லறம் என்ற கூற்றுக்கு இணங்க வாழ்ந்தனர் எனலாம். சங்ககாலத்திற்கு மிகவும் முற்பட்ட நிலையில் காதல் வாழ்வு சிறப்புற்று இருந்தாலும் நாளடைவில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம். களவில் ஈடுபட்டவர் பின்னர் அதனை இல்லையென்று மறுத்த போது கரண நிகழ்ச்சியைப் பெரியோர்கள் ஏற்படுத்தினர் எனலாம். இதனை,

> **“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
>
> **ஐயர் யாத்தனர் கரணம் என்ப” (தொல்.பொ.244)**

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம்.

குடும்ப வாழ்வில் இணைதற்குரிய தலைவன், தலைவியர்க்குரிய ஒப்புமைகளைத் தொல்காப்பியம் கூறியுள்ளது. குடும்ப வாழ்வு அமைதியாக, மகிழ்ச்சியாக, பயனுடையதாக அமைய இவை இன்றும் தேவை என்றே கருத முடிகின்றது. குடும்ப வாழ்க்கையில் ஈடுபட

உள்ள தலைவன் தலைவியர்க்கிடையே ஒப்புமைக்குணங்கள் இல்லையென்றால் வாழ்க்கையில் பல பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புப் பெரிதும் உள்ளது. இன்றைய குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்கெல்லாம் காரணம் ஒத்த தன்மை இல்லாமைதான். தொல்காப்பியம் குடும்ப வாழ்வின் இன்றியமையாமையை உணர்ந்து அதன் முக்கிய அங்கங்களான தலைவன் தலைவியர்க்கு வேண்டப்படும் என்பதை,

**“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**

**உருவு நிறுத்த காம வாயில்**

**நிறையே அருளே உணர்வொடு திருவென**

**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”**

என்ற மேற்கூறிய அடிகளால் அறிய முடிகின்றது.

பண்பாட்டிலும் பழக்கவழங்கங்களிலும் தமிழர்கள் அறங்களைப் பின்பற்றி வந்தார்கள். குடும்பச் சூழ்நிலையில் ஓர் ஆடையைக்கிழித்து தலைவர் இருவரும் உடுத்திக்கொள்ளும் சூழ்நிலை வந்த போதும், அன்பினால் ஒன்றிவாழ்வதே இல்லறம் என்பதை நிலையான அறமாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்ததை,

**“ஓரோஒகை தம்முள் தழீஇ ஒரோ ஒகை**

**ஒன்றன் கூறாடை உடுப்பவரே யாயினும்**

**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை” (கலி.பா.6)**

என்ற கலித்தொகை பாடல் மூலம் அறியலாம்.

**விருந்தோம்பல் அறம்**

சங்க காலத்தில் மிகவும் பின்பற்றப்பட்ட அறம் விருந்தோம்பல் அறமாகும். தமிழர்களுக்கே உரித்தான தலைச்சிறந்த பண்பு அறங்களில் ஒன்று விருந்தோம்பல். வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று வயிராற உணவுப்படைத்து மகிழும் உயர் பண்புடையவர்கள் தமிழர்கள். எத்தகைய அன்போடு வரவேற்றனரோ அத்தகைய அன்போடும், முகமலர்ச்சியோடும், பிறருக்கு உதவும் உயர்பண்பினைக் கொண்டவர்கள். சான்றாக அதியமான் நெடுமான் அஞ்சியின் விருந்தோம்பல் சிறப்பினை ஔவையார்,

**“ஒரு நாள் செல்ல மறுநாட் செல்லினும்**

**பல நாட்டு பயின்று பலரோடு செல்லினும்**

**தலைநாட் போன்று விரும்பினன் மாதோ” (புறம்.பா.208)**

என்ற பாடல் அடிகள் மூலம் புகழ்ந்துரைக்கிறார்.

**ஈகை அறம்**

தம்மிடம் உள்ள பொருளைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுப்பது, வறுமையில் உள்ள மக்கள் தம்மை நாடி வரும் போது அவர்களுக்குத் தம்முடைய பொருள்களை ஈதல் என வாழ்வின் அறங்கள் பல உள்ளன. செல்வம் பெற்றதன் பயன் ஈதல்தான். பழுத்த மரத்தை நாடிப்பறவைகள் செல்வது போல தம்மை நாடி வருபவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும். வறியவர்க்கு கொடுக்கும் மனமில்லாதவன் பொருள் இருந்தும் இல்லாதவனாக இருக்கின்றான்.

**“ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது**

**ஊதியம் இல்லை உயிர்க்கு” (குறள்.பா.231)**

வறியவருக்கு ஈதலும் அதனால் உண்டாகும் புகழுடன் வாழ்வதும் மனித வாழ்விற்கு இன்றியமையாதது என்று குறள் கூறுகின்றது.

**“பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரே” (குறள்.பா.115)**

என்ற பாடல் வரியில் பெரிய உதவி செய்தால் அவரை யாவரும் போற்றுதல் இயல்பு எனக் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகின்றது. மற்றவர்க்கு உதவி செய்யும் மனப்பான்மை அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் மனதில் வேரோடிக் காணப்பட்டது. ஈதல் இல்லாத நாட்களும் இரவலர்கள் இல்லம் தேடி வராத நாட்களும் பயனற்றவை எனக் கருதப்பட்டன.

**“இரவலர் வாரா வைகல்**

**பல வாகுக” (குறுந்.பா.137)**

என்று தலைவன் தலைவியின் நல்மனத்தை நீங்கி அவள் மனம் வருத்தப்படுமாறு தலைவன் பிரிந்து சென்றால் அவளிடம் பொருள் பெறும் இரவலர் வராத நாள்கள் பல ஆகுக என்று கூறுகின்றான். ஒவ்வொரு நாளுமே இரவலர்களுக்கு அவர்கள் உதவி செய்து கொண்டே இருக்க வேண்டும் என நினைத்த அவர்களின் உள்ளத்தை இப்பாடல் வழி அறிய முடிகின்றது. அறத்தால் புகழ் பெற விரும்புகின்றவர்கள் பொருளைச் சேர்த்து வைத்துக் கொள்ள விரும்பமாட்டார்கள் பிறருக்கு உதவுவதிலேயே கவனம் கொள்வர்.

**“நல்இசை வேட்ட நயனுடை நெஞ்சின்**

**கடப்பாட் டாளனுடைப் பொருள் போலத்**

**தங்குதற்கு உரியது அன்று” (குறுந்.பா.143)**

மற்றவர்க்கு எப்போதும் உதவி செய்வதால் செய்பவருக்கும் நன்மை ஏற்படும். உலக நடப்பறிந்து வாழும் ஒப்புரவாளனின் செல்வம் அனைவருக்கும் பொதுவானது. அதனை தமக்கு மட்டுமே உரியது என்று கூறுவது நற்செயல் அன்று என்பதை இப்பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**முடிவுரை**

வாழ்வியலுக்குத் தேவையான அறங்களான குடும்ப அறம், விருந்தோம்பல் அறம், ஈகை அறம் முதலிய அறங்களைப் புலவர்கள் மிகச்சிறந்த முறையில் எடுத்துக் காட்டியிருப்பது சங்க இலக்கியத்திற்கு வலிமையையும், புகழையும் சேர்ப்பதாக அமைகின்றன.

# வள்ளலார் வலியுறுத்தும் அறம்

*வி.எஸ்.ராஜேஸ்வரி, ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-11.

**முன்னுரை**

உலக மக்கள் துன்பம் நீங்கி இன்பம் பெறுவதற்குரிய வண்ணம் சமரச சுத்த சன்மார்க்க நெறியை இந்த உலகிற்கு வழங்கிய உத்தமர் வள்ளலார் ஆவர். இவருடைய கொள்கைகள், செயல்கள், சிந்தனைகள் அனைத்தும் மக்களின் வாழ்க்கையை வளம் பெறச் செய்தலையே முதன்மையாகக் கொண்டுள்ளன. இவருடைய திருவருட்பா உலக உயிர்கள் நலம் பெற பாடிய ஒப்பற்ற பனுவல்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இத்திருவருட்பா ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஆறாவது திருமுறையின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ள சித்திவளாகப் பகுதியில் இடம்பெற்றுள்ள 'தத்துவ வெற்றி' எனும் பகுதியில் நற்பண்புகளை வளர்ப்பதற்கான வழிமுறைகள் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பதனை இக்கட்டுரை விளக்குகின்றது.

**மனநலம் உயர்வதற்கான நல்வழிகள்**

ஒருமனிதன் உயர்ந்தவனாக, சிறந்தவனாக, நல்லவனாக வளர்ந்திட வேண்டுமெனில் அவனிடம் உயரிய நற்பண்புகள் மேலோங்கி திகழ்ந்திட வேண்டும். அத்தகைய நற்பண்புகளுள் மன ஒருமைப்பாடு, சிந்தனைத் திறன் போன்றவை இருத்தல் வேண்டும். மேலும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் நீங்கியவராகவும், கோபம், தூக்கம், மரணம் எனும் இவற்றைக் கண்டு அஞ்சாதவனாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய குணநலன்கள் உள்ள மனிதர்களே சிறந்த மனிதர்களாகத் திகழ்ந்திட முடியும். இத்தகைய நல்வழிகளை வள்ளலார் வழிநின்று இங்கு ஆராயப்படுகின்றன.

**மனஒருமைப்பாடு**

'மனிதமனம் என்பது குரங்குப் போன்றது' என்பது ஆன்றோர் கூற்று. எந்த ஒரு செயலைச் செய்து முடிக்க வேண்டுமென்றாலும் அதற்கு மன ஒருமைப்பாடு அவசியமாகிறது. இத்தகைய மன ஒருமைப்பாடு இல்லையெனில் எடுத்துக்கொண்ட செயல் எளிதில் வெற்றி பெறுதல் அரிது. ஆதலால் மனதைஎப்பொழுதும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் வேண்டும் என்பது வள்ளலாரின் முக்கியக் கொள்கையாகும்.

**"மனம் எனும்ஓர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்**
**மற்றவர்போல் எனைநினைத்து மருட்டா தேகண்டாய்**
**இனமுறஎன் சொல்வழியே இருத்தியெனில் சுகமாய்**
**இருந்திடு நீஎன் சொல்வழி ஏற்றிலை ஆனாலோ**
**தினையளவுன் அதிகாரம் செல்லவொட்டேன் உலகம்**
**சிரிக்கஉனை அடக்கிடுவேன் திருஅருளால்" (பா.எண்:2)**

என்ற பாடலில் வள்ளலாரின் மன ஒருமைப்பாட்டுக் கொள்கையைக் காண முடிகின்றது.
மனதிற்குள் படபடப்பு ஏற்படும்போது சூழ்நிலையைக் கண்டு துவண்டு விடாமலும் சிதைந்து போகமலும் நிதானமாக மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திட வேண்டும் என்பதனை,

**"பன்முகஞ்சேர் மனம் எனும்ஓர் பரியாசப் பயலே**

**பதையாதேசிதையாதே பார்க்கும்இடம் எல்லாம்**

**கொன்முகங் கொண்டடிக்கபோய்க் குதியாதேஎனது**

**குறிப்பின் வழிநின்றிடு நின் குதிப்பு நடவாக" (பா.எண்:3)**

என்று குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகின்றது. அதாவது மனிதன் மனதைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் மட்டுமே மன ஒருமைப்பாட்டைப் பெற்றிட முடியும் என்பது வள்ளலாரின் கருத்தாகும்.

**சிந்தனைத்திறன்**

சிந்தனைத்திறன் வளம்பெற வேண்டுமெனில் நல்ல மனநிலை அவசியமாகும். நல்ல மனநலத்துடன் இருக்கும் ஒருவரால்தான் நல்ல சிந்தனைகளை உருவாக்கிட முடியும். ஐம்புலன்களின் வழி பெறும் அனுபங்களை நன்கு நிதானமாக ஆராய்ந்து அவற்றின் பயன்களை இச்சமூகத்திற்குப் பயன்பெறும் வகையில் ஆக்கச் சக்திகளாக மாற்றுவதே சிந்தனைத் திறன் வளர்ச்சியாகும். இத்தகைய சிந்தனைத் திறன் எண்ணத்தைத் தனக்குள் கொண்டுள்ள வள்ளலார் அவர்கள்

**"விரிந்தமனம் எனும் விளையாட்டுப் பயலே**

**விரிந்துவிரிந் தலையாதேமெலயாதேவிடயம்**

**புரிந்தநெறிபுரிந்தவமேபோகாதேபொறிவாய்ப்**

**புரையாதேவிரையாதேபுகுந்துமயங் காதே" (பா.எண்:4)**

என்று பாடியுள்ளார். அதாவது சித்திரத்தில் வரைந்துள்ள ஓவியம் போல என்றும் மாறாத மனம் வேண்டும் என்பதை வள்ளலார் இதன்வழி உணர்த்தியுள்ளார்.

**மும்மலம் நீங்கியப் பண்பு**

ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் உள்ளவரை ஒரு மனிதன் மேம்பட்டவனாகத் திகழ முடியாது. சமூகத்தில் சிறந்த சிந்தனைவாதியாக, ஒப்பற்ற ஒரு தலைவனாக உயர வேண்டுமெனில் இம்முக்குணங்களும் நீங்கி வாழவேண்டும் என்பதனை வள்ளலார் குறிப்பிடுகின்றார்.

**அ) ஆணவம்**

ஆணவம் எனும் குணம் உள்ளவரின் சிந்தனையில் எதனையும் தெளிவாய் அறிந்து கொள்ள இயலாத இருன்மைத் தன்மையே விளங்கும் என்பதனை

**"எத்துணையும் காட்டாத ஆணவம்என் றிடும்ஓர்**

**இருட்டறைக்கோர் அதிகாரக் குருட்டுமுடப் பயலே**

**இத்தனைநாள் பிடித்துனைக் கண்டுதுரத் திடவே**

**இன்னும் அரைக்கணந்தரியேன் இக்கணத்தே நினது**

**பொத்தியசுற் றத்துடனே போய்விடுதி இலையேல்**

**பூரணமெய் அருள்ஒளியால் பொன்றுவிப்பேன் நினையே" (பா.எண்:13)**

என்ற பாடலின் மூலம் குறிப்பிடுகின்றார். அதாவது ஞானம் எனும் அருள் ஒளியே ஆணவம் எனும் அறியாமை இருளை அகற்றும் என்பது வள்ளலாரின் கருத்தாகும்.

**ஆ) கன்மம்**

கன்மம் என்பதை வினைப்பயன் என்று வள்ளலார் கூறியுள்ளார். உயிர்களிடத்தில் அன்பு காட்டி நன்மை செய்து வாழ்வதே மானிட சமூகத்தின் உயர்ந்த பேறாகும். இந்நிலையில் வாழ்வில்

மேம்பட வேண்டுமெனில் கன்மம் எனும் குணம் மறைந்து எவ்வுயிர்களுக்கும் நன்மை செய்து வாழும் உயரிய குணம் வேண்டும். இதனை வலியுறுத்தவே

**"கன்மம்எனும் பெருஞ்சிலுகுக் கடுங்கலகப் பயலே**

**கங்குகரை காணாத கடல்போலே வினைகள்**

**நன்மையொடு தீமைஎனப் பலவிகற்பங் காட்டி**

**நடத்தினைநின் நடத்தை எலாம் சிறிதும் நடவாது" (பா.எண்:12)**

என்று பாடியுள்ளார். அதாவது கன்மம் எனும் குணத்தைக் கட்டுப்படுத்தி வாழும் பொழுது மனம் தூய்மையடைகிறது என்பதை இதன்வழி விளக்கியுள்ளார்.

**இ) மாயை**

மாயை எனும் குணத்தை வஞ்சகம் என்று குறிப்பிட்டுள்ள வள்ளலார் இதனை நீங்கிய மனமுடையவராக மனிதர்கள் வாழவேண்டும் என்று கூறியுள்ளார். இதனை

**"மாமாயை எனும் பெரிய வஞ்சகநீ இதுகேள்**

**வரைந்த உன்தன் பரிசனப்பெண் வகைதொகைகள் உடனே**

**போமாறுன் செயல்அனைத்தும் பூரணமாக் கொண்டு**

**போனவழி தெரியாதே போய்பிழைநீ இலையேல்**

**சாமாறுன் தனைஇன்றே சாய்த்திடுவேன் இதுதான்**

**சத்தியம்என் றெண்ணு தின்என் தன்னை அறியாயோ" (பா.எண்:11)**

என்றபாடலின் வழி குறிப்பிட்டுள்ளதனால் அறிய முடிகின்றது. மேற்கூறப்பட்டுள்ள மும்மலங்கள் நீங்கிய மனதில் நல்ல சிந்தனைகளும், உயர்ப் பண்புகளும் தோன்றும் என்பது வள்ளலாரின் வாக்காகும்.

**கோபம் நீங்கியஉள்ளம்**

மனிதன் அனைவரிடமும் அன்பு காட்டி வாழும் பொழுது சுற்றத்துடன் இணைந்து இனிது பழகி வாழ முடியும். ஆனால் கோபம் கொண்ட உள்ளம் உடையவராக இருந்தால் தன் கோபத்தால் தான் நிம்மதியை இழப்பதன்றி தன்மைச் சார்ந்துள்ள சுற்றத்தாரின் மகிழ்ச்சியையும் குலைத்துவிடும் என்பதனை வள்ளுவர்

**சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**

**ஏமாப் புணையைச் சுடும் (குறள்:306)**

என்று கூறியுள்ளார். இத்தகைய சிந்தனையை உடைய வள்ளலார் கோபம் எனும் குணத்தின் இயல்பைப் பற்றிக் கூறுகையில்

**"கோபமெனும் புலைப்பயலேகாமவலைப் பயலே**

**கொடுமோகக் கடைப்பயலேகுறும்புமதப் பயலே**

**தாபஉலோபப்பயலேமாற்சரியப் பயலே**

**தயவுடன்இங் கிசைக்கின்றேன் தாழ்ந்திருக்காதீர்காண்**

**தீபம்எலாம் கடந்திருள்சேர் நிலஞ்சாரப் போவீர்**

**சிறிதுபொழுதிருந்தாலும் திண்ணம் இங்கேஅழிவீர்" (பா.எண்:18)**

என்று குறிப்பிட்டுள்ளார். அதாவதுகோபம் எனும் குணத்தினை மனதில் சிறிது நேரம் கூட தங்கவிடக் கூடாது என்பது வள்ளலாரின் கொள்கையாகும்.

**முடிவுரை**

1. மனக் கட்டுப்பாடே மன ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கான வழிமுறையாகும் என்பதை வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்.
2. நல்ல மனநலம் உள்ளவரின் உள்ளத்தில் மட்டுமே உயர்ந்த சிந்தனைகள் தோன்றும் என்பது புலனாகிறது.
3. ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலம் நீங்கியர்வர்களே சிறந்த மனிதர்களாகத் திகழ்ந்திட முடியும்.
4. கோபம் எனும் குணம் நீங்கி அனைத்து உயிர்களின் மீதும் அன்பு காட்டி வாழ்தலே இந்த உலகில் சிறந்த மனிதர்களாக வாழ்வதற்கான சிறந்த வழிமுறையாக வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்.

**துணைநின்ற நூல்கள்**


1. க.வெள்ளைவாரணனார் - திருவருட்பாச் சிந்தனை
பூம்புகார் பதிப்பகம்
சென்னை– 600 108
மு.ப.2009.

2. ஆ.பாலகிருஷ்ணபிள்ளை(ப.ஆ) - திருஅருட்பா
சாரதா பதிப்பகம்
திருவல்லிக்கேணி
சென்னை– 600 005
மு.ப.2006.

# ஜோதிர்லதா கிரிஜாவின் திருப்புமுனை நாவலில் சமுதாய அறம்

***அ.ச.சண்முகவள்ளி**, ஆய்வியல் நிறைஞர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-11.

**முன்னுரை**

அறமே மானுட வாழ்வியலின் அடிப்படை. அறம் சார்ந்த செயல்பாடுகளே மானுடத்தைக் காலம் காலமாக வழி நடத்தி வந்துள்ளன. பாதைகளின்றி பயணங்கள் இல்லை. முறையாகப் பயணம் செய்ய, செல்ல முன்னோர்களால் நிர்ணயிக்கப்பட்ட பாதையே அறமாக அமைந்தது. எவரால் எந்தக் காலக் கட்டத்தில் அது ஏற்படுத்தப்பட்டது என்பதை மானுடம் கணிக்க இயலாது. எனினும், தனிமனிதனும், சமுதாயமும் ஒழுங்குபட வாழ்வதற்கு அறம் தேவை என்பதை மானுடம் இன்றுவரை உணர்ந்துள்ளது. ஒழுக்கம், நல்வினை, ஈகை, ஒப்புரவு, நீதி, நேர்மை, உண்மை, ஒழுக்கக் கட்டுப்பாடு என்ற பல்வகைச் செம்மைகளைக் குறிக்கும் ஒரு சொல்லாக இது வழங்கப் பெற்றுள்ளது. மேலும் திருப்புமுனை நாவலில் காணலாகும் அறத்தைப் பற்றியும், அறச்சிந்தனைகளைப் பற்றியும் விவரிப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம் விளக்கம்**

அறம் என்ற சொல்லுக்கு கழகத் தமிழ் அகராதி **“கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை”** போன்ற பல பொருள்களை வழங்குகிறது.

அபிதான சிந்தாமணி **“அறம் முப்பத்தியிரண்டு”** என்று குறிப்பிடுகின்றது. மணிமேகலைத் தமிழ் அகராதி **“சமயம், ஞானம், புண்ணியம், நோன்பு, ஒழுக்கம், தவம், தானம் ஆகியவையே அறம்”** எனக் கூறுகிறது.

சொற்பிறப்பியல் அகராதி **“நல்வினை, ஜெபம், ஏழைகளுக்கு உதவுதல், நலம், இன்பம், தகுதி, கற்பு, நோன்பு, அறப்பயன், சமயம், ஞானம், அறச்சாலை, அறத்தெய்வம், நடுநிலை அறம்”** எனப் பதினைந்து விதமாகப் பொருள் தருகிறது.

**உறவுகளின் தன்மை**

இன்றைய சமுதாயத்தில் பணம் ஒன்றே மனித உறவுகளை நிர்ணயிக்கும் அளவுகோலாக மாறிவிட்டது. உண்மை, நீதி, நேர்மை எல்லாம் திரைபோட்டு மறைக்கப்படுகின்றன. நிலையற்ற இவ்வுலக வாழ்வில் பணத்திற்கும் பதவிக்கும் சமுதாயம் தரும் மதிப்பை அன்பிற்கும், நற்பண்பிற்கும் தருவதில்லை.

**“பந்தமாவது**

**பாசமாவது**

**பணம் இருக்கிறதா?”**

என்று கேட்குமளவுக்கு, மக்கள் இன்று மாக்களாக மாறிப்போய்விட்ட நிலையை இளந்தளபதி என்னும் கவிஞரின் கவிதை மூலம் உணரமுடிகின்றது.

**ஆன்மீக உணர்வு**

மனிதன் வாழ்வில் கடமைகளை முடித்து தனது இறுதி வாழ்வினை ஆன்மீகத்தில் கழிக்க விரும்புகிறான். ஆன்மீகத்தில் மனதைச் செலுத்தினால் அமைதி தோன்றும் என்பதை,

**“ஆன்மீக வழிப்போனால் அமைதி வாழ்வுத் தோன்றும்**

**ஆற்றலில் நடப்போர்க்கு அவன் புகழோங்கும்”**

என்று கோ. தனபாலன் கூறுகிறார்

**“மனிதன் இறைவனை உணர்வது ஆன்மீகம், மனித உடல் நிலையானதில்லை என்று நடப்பு மூலம் அறிந்துள்ள நிலையில் மனித ஆத்மா அழியாதது என்று உணர்ந்த நிலையில் மனிதனுக்குள்ளே இயங்கி, அவனை உருவாக்கி வளர்ந்து நிறைவு பெற பேரின்பத்தையும், பேருண்மையும் அறிய ஏதுவாவது ஆன்மீகம்.”** என ஜோதிர்லதா கிரிஜா குறிப்பிடும் பொழுது ஆன்மீக உணர்வு என்பது நம்பிக்கை அடிப்படையில் இறைவனை உணர்வதாகும். ஆன்மீக உணர்வு-ஆன்மீகத் தேடலுக்கு மரபு சார்ந்த சமயக் கோட்பாடுகள் அடிப்படைகளாக அமைகின்றன.

**சமூகச் சேவை**

ஒரு குறிப்பிட்ட எண்ணங்களை, பழக்க வழக்கங்களை, செயல்களை உடைய ஒரு சமுதாயத்தினுள் இன்னொரு பண்பாட்டு பின்னணி உடையோர் தம் எண்ணப் பரப்பதல்களுக்காகவோ, புதுவாழ்வு குறித்தோ வந்து சேரும்போது இரு பண்பாட்டின் கலப்பு ஏற்படுகின்றன. திருப்புமுனை நாவல் இப்பண்பாட்டுக் கலப்பினைத் தெளிவாகச் சித்தரிக்கிறது.

மதத்தைப் பரப்புவதற்காக வந்த பாதிரியார்கள் தங்களின் கருணையாலும், தொண்டு உள்ளத்தாலும், சேவையினாலும் பல்வேறுபட்ட மக்களையும் தங்கள் மதத்துடன் இணைத்துக் கொண்டனர். அவர்களுள் மேரியும் ஒருத்தி, தனது பாதுகாப்பிற்காக மதம் மாறினாலும், சிறந்த சேவையின் காரணமாக ஒரு தேவதையாகவே காட்சி தருகிறாள். அவளுடைய கருணையையும், அன்பையும் பற்றி ஜோதிர்லதா கிரிஜா குறிப்பிடும் பொழுது **“மத்தவங்ககிட்ட எப்படி ஒரு கருணையா இருக்காங்கிறே. அவகிட்ட பேசற ஏழைங்க கண்ணப்பாரு. கிருணன் காலடியில் நிக்கிற பசுவோட கண்ணு மாதிரி ஒருபாவம். அவகிட்ட ஒரு ஒளி இருக்குய்யா”** மேரியிடம் இருக்கும் ஒளி பக்குவப்பட்ட அவளது சேவையின் ஒளி ஆகும். புலையர் இனப்பெண்ணான மேரி கிருத்துவ மதத்தில் இணைந்த பின்னர் முற்றிலும் அப்பண்பாட்டிற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு சிறந்த சேவை கொண்டவளாக மாறினாள் என்பது தெளிவாகிறது.

**பிறர்க்கு உதவும் மனப்பான்மை**

காட்டில் பெய்யும் தொடர் மழையில் காடு முழுவதும் விஷக்காய்ச்சல் பரவுகிறது. மிஷினரி மருத்துவமனைக்குச் சென்று கிரிதரன் விஷக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்கிறான். போதிய மருந்துகள் இல்லாததால் டாக்டர் துரை அவனை குலசேகரத்திற்குச் சென்று மருந்து வாங்கி வருமாறு கூறுகிறார். குலசேகரம் சென்று ஜான்சன் ஆசிர்வாதத்திடம் நிலைமையைக் கூறுகிறான் கிரிதரன். டாக்டர் அங்கிருக்கும் மருந்துகள் தங்களுக்கே போதவில்லை என்று கூறுகிறார். ஆனால் கிரிதரன் விடாப்பிடியாக நின்று தேவையான மருந்துகளைப் பெற்றுக் கொண்டு மலைக்குத் திரும்புகிறான்.

**“மருந்து வேணும்**

**இருந்தா கொண்டுட்டு போவும்**

**வோய் என்றார் அவர் உரக்க**

**எனக்குத் தெரியாது, மருந்தில்லாமல்**

**நான் மலை ஏறமாட்டேன்**

**செத்தாலும் சரி**

செரிசாவும்

நான் பேசாமல் நின்றேன்

ஃபாதர் குரலைத் தாழ்த்தினார்.

உமக்கு மருந்து குடுத்திட்டு இவியளுக்கு

நான் என்னவே குடுப்பேன்"

காட்டில் கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாமல் காட்டாறுகளைத் தாண்டி நகரத்திற்கு வந்து மருந்துகளைப் பெற்றுச் செல்கிறான். பிறருக்கு உதவி செய்யும் உள்ளம் கொண்டவனாகக் கிரிதரனைப் படைத்துள்ளார் ஆசிரியர்.

**மனிதநேயம்**

மனிதநேயம் என்பது மனிதருக்கு மனிதர் இருக்க வேண்டிய தொடர்புறவு பற்றிய ஒருவிதமான மனநிலை. பிறர் துன்பங்கண்டு உதவுவதும், பிறருக்காக வாழ்வதும் மனிதநேயம். நலிந்தோர் மீது உயர்ந்தோர் காலமறிந்து கைம்மாறு கருதாது காட்டும் இரக்க உணர்வே மனிதநேயம். இன்றைய காலகட்டத்தில் மனிதநேய உணர்வு குறைந்து கொண்டே வருகிறது. இதனை உணர்த்தும் வகையில்,

"துன்பம் வந்தபோது

தொலைந்துபோனது

மனிதநேயம்"

என மித்ரா அவர்கள் குறிப்பிடுகிறார்.

**இரக்க உணர்வு**

மனிதநேயத்தின் உள்ளடக்கத்தில் பொதிந்துள்ள பல்வேறு கூறுகளில் இரக்கமும் ஒன்று. மனிதநேயத்தின் எந்த ஒரு கூறினை எடுத்து விளக்கினாலும் மற்ற கூறுகள் இயல்பாய் வந்து ஒட்டிக்கொண்டு ஒளிவீசும். இரக்கத்தின் ஊற்றாக,

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"**

என்று வள்ளலாரின் வரியினைக் குறிப்பிடலாம்.

**"குட்டப்பன் என்னிடம் ஏமான் இது மற்றதாக்கும். மிஷினரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவாம ஒக்காது என்றான். என்னது? நாலு நாளாட்டு காணிக் குடிகளில் காய்ச்சலு படர்ந்திட்டு எண்ணு சின்னமுத்தன் சொன்னான். இது அதுதான் வாயலிருந்து கெட்ட நாத்தம் வருது"** என்ற பாத்திரத்தின் கூற்று வழி இரக்க உணர்வு வெளிப்படுகிறது.

**மனித நாகரிகம்**

**"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**

**நாகரிகம் வேண்டு பவர்"**

என்ற நயம்படக் கூறுகிறர் வள்ளுவர். இதன்வழி திருப்புமுனை நாவலிலும் சுண்டன் மலையன் மகள் நீலி, ஆதிவாசிப் பெண்ணான நீலி மலையன் இனத்தை சேர்ந்தவள். நீலியுடன் கிரிதரன் பழகியது மொத்தம் பதினைந்து நாட்களே. வேங்கை மரத்தடியில் தினமும் இருவரும் சந்தித்துக் கொள்கின்றனர். அப்பொழுது அவன் காதல் பரிசாக ஒரு மூக்குதியைக் கொடுக்கிறான். ஆனால் மலையன் இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கம் அணிவதில்லை. நீலி அந்த மூக்குத்தியைக் தொடவே தயங்குகிறாள்.

"எந்து

இங்கேபார்

அய்யோ இதெந்து

**இதுபொன்**

**அய்யோளுங்கபொன்னுபாடில்லா**

**என்னது**

**மலையத்திக்குபொன்னணியான் விதியில்லா”**

**சும்மா பேசாதே. நீ இத போட்டா எப்பிடி இருப்பே தெரியுமா? தேவி கன்னியாகுமரி மாதிரி இருப்பே.**

**கறுப்புதான் நகைக்கு ஒத்த நிறம் போடு”** போன்ற கருத்துக்களை உணர்த்துவதன் மூலம் மனித நாகரிகம் வெளிப்படுகின்றது.

**முடிவுரை**

அறம் பொருள் அனைத்தும் மக்களது இன்ப வாழ்வுக்கு உகந்ததாகும் என்ற அடிப்படையில் தனிமனிதனது வாழ்வின் மேன்மையைக் குறிக்கும் சமுதாய

வாழ்வைச் சுட்டிக் காட்டும் அகவாழ்வின் வெற்றியைச் சிறப்புற எடுத்துரைக்கும் எனலாம். அன்பு என்பது மனிதனின் வாழ்வில் முக்கியமான ஒன்று. அன்பு இல்லையேல் வாழ்க்கையே இல்லை எனலாம். ஒருவன் தன்னை நேசிப்பது போலவே பிறரையும், நேசிக்க வேண்டும் என்ற கருத்தையே அனைத்து நீதி நூல்களும் வலியுறுத்துகின்றன. நம் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நம்முடைய உயர்வான எண்ணங்களே காரணம் ஆகும். எண்ணங்கள் எப்போதும் உயர்ந்த எண்ணங்களாகவே இருக்கவேண்டும். தளர்ச்சியடையாமல் முயற்சிகளைமேற் கொண்டு ஊக்கமுடன் உடைப்பவர்களே வாழ்க்கையில் வெற்றி அடைவர். சோம்பலை அறவே போக்கி ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னால் வெற்றியடைவோம் என்ற நம்பிக்கையில் தொடங்கும் செயலே நிச்சயம் வெற்றியடையும்.

# சங்க இலக்கிய எட்டுத் தொகையில் அறம்

*முனைவர் பு.எழிலரசி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை, செயின்ட் ஜோசப் மகளிர்கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஓசூர் – 635 126.

**முன்னுரை**

பண்டைத் தமிழ் நாகரீகத்தினையும், சிறந்த சிந்தனையின் ஊற்றாகவும் விளங்குவது சங்க இலக்கியங்களே. அத்தகைய சங்க இலக்கியங்களை மூன்றாகப் பகுத்தனர் நம் முன்னோர்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு,பதினெண்கீழக்கணக்கு. இவற்றில் முன்னிரண்டும் சங்க காலத்தது, மற்றொன்று சங்கம் மருவிய காலத்தது.

**'கல் தோன்றி மண்தோன்றா காலத்தே**

**முன் தோன்றியது நம் மூத்தத் தமிழ்குடி'**

என்னும் கூற்றிலிருந்து நம் தமிழ் மொழியானது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருத்தல் வேண்டும். பண்டைக்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் சாதி மத பேதமின்றி வாழ்ந்தனர் என்பதற்கு அடையாளம், அவர்கள் அகம் புறம் என்று பிரித்துக் கொண்டு ஆங்காங்கே குழுக்களாக வாழ்ந்து வந்தனர். அதன் பின் தாங்கள் வாழ்ந்து வந்த இடங்களை ஐந்திணைகளாகப் பகுத்துக் கொண்டு வாழ்ந்தனர். திணை என்றால் ஒழுக்கம் என்பது பொருள். அதற்கேற்ப சங்கத் தமிழர்கள் புறவொழுக்கத்தோடு அக வொழுக்கத்தையும் கடைபிடித்து 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் பண்பாடு மாறாமல் வாழ்ந்து வந்தனர். அத்தகைய அறவொழுக்கத்தினைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நற்றிணையில் அறம்**

தலைவி தலைவனிடத்து குறையே கண்டாலும், அக்குறையை வெளிப்படையாகக் கூறாமல் நயமாக தோழியிடம் கூறுகிறாள்.

**"பகல் எரி சுடரின் மேனி சாயவும்,**

**பாம்பு ஊர் மதியின் நுதல் ஒளி கரப்பவும்**

**எனக்கு நீ உரையாயாயினை: நினக்கு யான்**

**உயிர் பகுத்தனன் மாண்பினன் ஆகலின்"**[1]

குறிஞ்சித் திணையில் தோழிக்கு தலைவி அறத்தோடு நிற்றல் என்னும் துறையில் அமைந்துள்ளது இப்பாடல். பாங்கியற் கூட்டத்தில் தலைமகளின் குறையைத் தீர்ப்பதற்கு தோழி முற்படுகின்றாள். ஆதனால் அவள் தலைவியிடம் 'நின் மேனி வாடிற்று: நெற்றி ஒளி குன்றிற்று ஆனால் அவற்றின் காரணத்தை நீ உரைக்கவில்லை. ஆயினும் நான் அறிவேன் என்கிறாள். ஆதற்குத் தலைவி அதற்காக நீ வருத்தப்படாதே தினைப்புனத்தில் தலைவன் என் முதுகை அணைத்தான் அதனால் அவ்வாறு இருக்கிறேன் என்று தோழியிடம் நயமாகக் கூறி தன் ஒழுக்கம் குன்றாதவாறு அறத்தோடு நிற்கின்றாள்.

தலைவன் பரத்தையிற் பிரிந்து சென்றாலும் தலைவியின் மேல் கொண்ட காதலால் தலைவியிடம் சேர நினைக்கின்றான். அப்பொழுது தலைவி ஏற்றுக் கொள்ள மாட்டாளோ என்று பயந்து விருந்தினனை வீட்டிற்கு அழைத்து வருகின்றான்.

**"தடமருப்பு எருமை மடநடைக் குழவி**

**தூண் தொறும் யாத்த கான் தகு நல் இல்,**

**கொடுங்குழைப் பெய்த செழுஞசெய் பேழை**

**சிறுதாழ் குழை பெய்த மெல் விரல் சேப்ப"[2]**

தன் கைகள் சிவக்க தலைவி அட்டில் சமைக்கிறாள். தலைவன் விருந்தொடு வருகின்றான். தலைவன் மீது இருக்கும் கோபத்தை விருந்தினர் முன் காட்டக் கூடாது என்பதற்காக தலைவி தன் அழகிய முல்லை போன்ற எயிறு காட்டி சிரிக்கின்றாள். தன் குடும்பத்தில் நடப்பது பிறருக்கு தெரியக் கூடாது என்பதற்காக தலைவி அவ்வாறு நடந்து கொள்கின்றாள்.

**குறுந்தொகையில் அறம்**

குறுகிய அடிகளை உடையதாயினும் வாழ்க்கைக்குத் தேவையான செறிந்தக் கருத்துக்களை தருவதனால் சங்க இலக்கியத்தில் குநற்தொகையை 'நல்ல குறுந்தொகை' என்று கூறினர் சங்கத் தமிழர். குறிஞ்சி நிலத்தில் வாழும் குரங்குகள் கூட பிரிவினைத் தாங்காது அப்படிப்பட்ட இரவுப் பொழுதில் தலைவன் தலைவியை சந்திக்க நினைப்பது தவறு என தோழித் தலைவிக்கு மறுப்பு தெரிவிப்பதிலிருந்து அவர்களின் ஒழுக்கம் இங்கு புலப்படுகிறது.

**"கருங்கட் தாக்கலை பெரும் பிறிது உற்றென,**

**கைம்மை உய்யாக் காமர் மந்தி**

**கல்லா வன் பறழ் கிளைமுதல் சேர்த்தி,**

**ஓங்குவரை அடுக்கத்து பாய்ந்து – உயிர் செகுக்கும்**

**சாரல் நாட! நடுநாள்**

**வாரல்: வழியோ! வருந்தும் யாமே!"[3]**

இருளில் தாவுதலையுடைய ஆண் குரங்கு, சாவினை அடைந்ததாக,கணவன் இல்லாமல் வருந்தும் கைம்மை வாழ்வினை பொறாது, தன் கணவனால் விரும்பப்பட்ட பெண் குரங்கு, தன் தொழிலை இனிக் கற்க வேண்டாத தன்னுடையக் குட்டிகளை சுற்றத்தாரிடம் அடைக்கலப்படுத்தி, உயர்நத மலைப்பக்கத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளும். விலங்குகள் கூட அறத்தொடு நிற்கும் நாட்டுக்குத் தலைவனே இரவுக்குறியில் தலைவியை சந்திப்பது தவறல்லவா? ஏன்று தலைவனிடம் மறுத்துக் கூறுகிறாள்.

தன் தாய் வீட்டில் பாலும் சோறும் உண்டத் தலைவி, தன் கணவன் வீட்டில் நடந்து கொள்ளும் விதம் நம் தமிழர் பண்பாட்டின் உயர்வினை விளக்கிக்அ காட்டுகிறது.

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்,**

**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ**

**குவளை உண்கண் குய்ப்புகைக் கழுமத்**

**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**

**இனிது' எனக் கணவன் உண்டலின்**

**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒன்னுதல் முகனே"[4]**

தலைவி இல்லறம் நிகழ்த்தும் சிறப்பினை நேரில் கண்டறிந்து வந்த செவிலித்தாய் நற்றாய்க்கு உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவியின் அடிசில் ஆக்கும் திறமும் தலைவனின் அன்போடு இயைந்த பாராட்டு மொழிகளும் அப்புகழ் மொழிகளால் தலைவி செருக்கு கொள்ளாது அகத்தே மகிழும் அரிய பண்பு செவிலியால் கண்டறியப்பட்டது தெற்றென விளங்கும்.

**ஐங்குநூற்றில் அறம்**

தலைவன தலைவியை மணந்து கொள்வேன் என்று உறுதி கூறி தலைவன் பொருள் தேட செல்வதும், தோழி தாயிடம் வந்து அறத்தொடு நிற்றலும் 'அஞ்சாதே' தலைவன் திரும்புவான் இது உறுதி என தோழி தாயிடம் உரைக்கின்றாள்

**"அன்னை, வாழி! வேண்டு அன்னை!புன்னையொடு**

**ஞாழல் பூக்கும் தண்ணந் துறைவன்**

**இவட்கு அமைந்ததனால் தானே**

**துனக்கு அமைந்தன்று, இவன் மாமைக் கவினே"[5]**

தலைவியின் கற்புக்கு எவ்வித பங்கமும் நேரவில்லை. தலைவன் தலைவியை கைவிடான் இனி தலைவனுக்கே உரியது என எடுத்துக் கூறுகிறாள்.

வினையின் காரணமாக நீங்கிச் செல்லும் தலைவன் தான் வருவதாக கூறிச் சென்ற கார்ப்பருவம் வருவதற்கு முன்னதாக வந்தமையை,

**"ஆர் குரல் எழிலி அழி துளி சிதறிக்**

**கார் தொடங்கின்றால், காமர் புறவே**

**வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்**

**தாழ் இருங்கூந்தல்! வம்மதி விரைந்தே"[6]**

கார் பருவத்தில் சொல்லச் சென்றான் தலைவன். ஆனால் அதன் வரவுக்கு முன்னரே வந்தான். தன் காதலியோடு புறவிற்குச் சென்றான் அப்பொழுது கார்பருவம் வந்தது அது கண்டு மகிழ்ந்து, தான் முன்னரே வந்தமைத் தோன்றக் காதலியிடம் இவ்வாறு கூறினான். தலைவன் சொன்ன சொல் தவறாமல் நடந்து கொண்ட முறை இப்பாடலின் வழி அறியப்படுகிறது.

**அகம் கூறும் அறம்**

பொருள் தேடச் சென்றத் தலைமகன் இடையில் தலைவி நினைவு வர தன் நெஞ்சை ஆற்றுப்படுத்துகிறான் .

**"அகல்வாய் வானம் மால் இருள் பரப்ப,**

**பகல் ஆற்றுப்படுத்த பையென் தோற்றமொடு**

**சினவல் போகி புன்கண் மாலை,**

**அந்த நடுகல் ஆள் என உதைத்த**

**கான யானை கதுவாய் வள் உகிர்"[7]**

காடடு யானையானது பாலை வழியில் உள்ள நடுகல்லை ஆள் என நினைத்த உதைத்தமையால் வளவிய பெருநகம் சிதைவுற்று பனை நுங்கின் தோடு போல முறிந்து வீழும் அருளிலாக் கொடுமையுடைய ஆரலைக் கள்வர் கொள்ளைக் கொள்வதற்குப் பதுங்கிக் கிடக்கும் இடத்தே காட்டின் கொடுமையால் வருவார் போவார் இன்மையால் தம் வறுமையை நீக்குவாரைக் காணமாட்டாத இடமான கொடிய சுரவழி அம்மாலைக் காலத்தே நின்று தலைவியை நினைத்துத் தலைவன் வருந்துகின்றான்.

குடும்ப வாழ்க்கையில் மட்டுமன்றி, அரசியலிலும் மக்களைப் பேணிக்காப்பதிலும் தமிழர்க்கு நிகர் தமிழர்தான் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. அதில் புறநானூறு பண்டைத் தமிழகத்தின் அரிய வரலாற்றுத் தொகுப்பு பண்பாட்டுக் களஞ்சியம், இலக்கியக் கருவூலம் இதனுள் தமிழகத்தின் கோநகரங்கள், துறைமுகங்கள், மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள் பற்றிய செய்திகளைப்

பற்றி, புரவலர்கள் புலவர்களை போற்றி அவர்களின் அறிவுரைகளைச் செவிமடுத்து ஒழுகிய சிறப்புகளும், மன்னர் தம் மானப் பண்பு பற்றிய அரிய குறிப்புகளும் போர்த் திணவுற்று அறமுறைப் பிறழாது போர் புரிந்து, மார்பில் வேலேற்ற மைந்துடை காளையரின் வீரப் பெருமைகளும், மூவேந்தரின் குடிமை முதலான சால்புகளும், களச்சாவுற்ற தம் மைந்தரின் உடல் கண்டு பெருமிதமெய்திய தாயரின் மறக்குணங்கள் இன்ன பிறவும் புறநானூற்றில் மிக அழகுற எடுத்துரைக்ப் பெறுகின்றன. அதுமட்டுமல்லாமல் போருக்குச் செல்லும் அரசர்களுஞ் அறத்தோடு நடந்துகொள்ளும் முறைமை இங்கு குறிப்பிடத் தக்கது.

**"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடையீரும், பேணி, பேணித்**

**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**

**பொன் பொல் புதல்வர் பெறாஅதீரும்,**

**எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சோமின் என"**[8]

இப்பாடலில்' அறத்தின் நெறியின்படி பெருவழுதியின் இயல்பினை கூறுகிறார்.

**முடிவுரை**

இவ்வாறாக சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் மக்களின் வாழ்க்கையை தெற்றென விளக்கும் கருத்துக் கவூலங்களாக விளங்குகின்றன. 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல் எட்டுத்தொகையில் அகம் புறம் இவை இரண்டிலும் திணை பிரித்து அதற்கேற்ப மக்கள் வாழ்ந்தனர். அகத்திணை அன்பின் ஐந்திணையில் மனையியல் வாழ்க்கைப் பற்றியும், புறத்திணையை பன்னிரெண்டாகப் பிரித்து அரசியல் வாழ்க்கையையும் விளக்கி மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என்னும் அறச்சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்தள்ளது போற்றுதற்குரியது.

**சான்றெண் விளக்கம்**


1. நற்றிணை, பா.எண் 128
2. மேலது, பா.எண் 120
3. குறுந்தொகை, , பா.எண் 69
4. மேலது, , பா.எண் 167
5. ஐங்குறுநூறு, , பா.எண் 103
6. மேலது, , பா.எண் 42
7. அகநாநூறு, , பா.எண் 365
8. புறநாநூறு, பா.எண் 9

# புறநானூற்றில் அறச்சிந்தனைகள்

*முனைவர் க.முரளிதரன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 22.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பினை உடையன. சங்க இலக்கியங்கள் பொருள் இலக்கணத்தை அகம், புறம் என்று பிரித்துக் காட்டுகின்றன, நம் தமிழர்கள் பண்பட்ட வாழ்க்கை முறையில் பல மேம்பட்ட அறங்களை இந்த உலகிற்கு வழங்கியவர்கள் ஆவர். பழந்தமிழ்ச் சமூகம் தங்கள் அகவாழ்விலும் புறவாழ்விலும் ஒழுகிய நல்லறங்களுக்குச் சாட்சியாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன.

**வாழ்வியல் அறம்**

உலகில் எத்தனையோ உயிரினங்கள் இருந்தாலும் மனிதனுக்கு மட்டும் தான் வாழும் நெறிமுறை உண்டு. கூடி வாழ்ந்த தமிழர்கள் சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனிக் கடமைகளை உருவாக்கிக் கொண்டு அதன்வழியே வாழ்ந்து வந்தனர்.

**(i) உலக ஒற்றுமை**

பழந்தமிழர் பரந்த மனப்பான்மை மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். எமக்கு எல்லா ஊரும் எமது ஊரே, இந்த உலக மக்கள் அனைவரும் எம் உறவினரே என்ற மனப்பான்மை கொண்டிருந்தனர். இச்செழுமை வாய்ந்த வாழ்வியலின் வெளிப்பாடுதான்,

**"யாது மூரே யாவருங் கேளீர்**

**தீதும் நன்றும் பிறர்தர வாரா" (புறம், 192)**

என்று கணியன் பூங்குன்றன் என்னும் புலவரைத் தூண்டியது. இவ்வாறான செழுமையான மனப்பான்மை மிக்கவர்களால் தான், தனக்கு நிகழும் நன்மை தீமைகளுக்குத் தானே காரணமாக அமைகிறோம் என்று உணரமுடியும் என்கிறார்.

**(ii) மக்கள் வழியே மாநிலம்**

மனித வாழ்க்கையில் ஒரு நாட்டின் சிறப்பு என்பது அந்நிலத்தில் வாழும் மாந்தர் சிறப்பே ஆகும். நிலத்தில் வாழும் மாந்தர் நல்ல மனவளம் இன்றி இருந்தால் மலைவளமும், நிலவளமும், கடல் வளமும் பயனேதும் இல்லாமல் போகும், இதனை உணர்ந்த ஔவையார்,

**"நாடா கொன்றோ காடா கொன்றோ**

**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**

**எவ்வழி நல்லவர் ஆடவர்**

**அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம், 187)**

என்று பாடுகிறார். எனவே, ஒரு நாட்டின் செழிப்பிற்கும் அழிவிற்கும் காரணமாக அமைவது அந்நிலத்து மாந்தரே அன்றி, அந்நாட்டை இழித்துரைப்பது ஆகாது என்கிறார்.

(iii) **பகுத்துண்ணும் வாழ்க்கை**

பழந்தமிழ்ச் சமூகம் வாழ்வின் மேன்மை என்ன? என்பதை நன்கு உணர்ந்திருந்தது. இந்திரர் அமிழ்தம் கிடைத்தாலும் அதனையும் பிறரோடு பகுத்துண்டு வாழ்ந்த வாழ்க்கை நிலையினை,

**"உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திர**

**அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்**

**தமியர் உண்டலும் இலரே"** (புறம், 182)

என்னும் புறநானூற்று அடிகளால் அறியமுடிகிறது. இதன் பொருட்டே 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்று திருவள்ளுவரும், 'மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று சாத்தனாரும் வலியுறுத்தினர்.

**(iv) செய்ந்நன்றி மறந்தவர் நரகம் சேர்வர்**

ஒருவன் இப்பிறப்பில் செய்த வினைகளின் பயனை மறுபிறப்பில் அனுவிப்பான் என்று பல்வேறு மதங்களும் வலியுறுத்துகின்றன. ஒருவன் கதியற்று வழியற்று நிற்கும் காலத்தில் அவருக்கு யாரேனும் சிறு உதவியேனும் செய்திருந்தால் உடலில் உயிர் உள்ளளவும் அதனை மறக்கக்கூடாது. அவ்வாறு மறப்பவர்கள் மறுபிறப்பிலும் நற்கதியை அடைய மாட்டார்கள். இதனை உணர்த்தும் முகமாக,

**"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்**

**மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**

------------------------------------------------------------------

**செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென**

**அறம்பா டிற்றே யாயிழை கணவ"** (புறம், 34)

எனும் ஆலத்தூர் கிழார் பாடிய பாடல் அமைகிறது. செயற்நன்றி மறத்தலின் கொடுமையை இப்பாடல் நன்கு வெளிப்படுத்துகிறது.

(V) **செல்வத்தின் பயன் ஈதல்**

உலகை ஆளும் மன்னனுக்கும், கல்லாத மனிதனுக்கும் உயிர் வாழ்வதற்குத் தேவை நாழி அளவு உணவும், மேலாடை, கீழாடை எனும் இரு ஆடைகளுமே ஆகும். இந்த உண்மையினை அறிந்து நக்கீரர், ஒருவன் தாம் பெற்ற செல்வத்தில் ஒரு பகுதியேனும் பிறருக்கு ஈதல் வேண்டும். மாறாக அனைத்துச் செல்வத்தையும் தானே துய்க்க வேண்டம் என்று எண்ணிச் செயல்பட்டான் எனில் வாழ்வில் அவன் இழப்பது பலவாக இருக்கும் என்கிறார். இதனை,

**"தென்கடல் வளாகம் பொதுமை யின்றி**

**வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்**

---------------------------------------------------------------------

**செல்வத்துப் பயனே ஈதல்**

**துய்ப்பேம் எனினே தப்புந பலவே"** (புறம், 189)

எனும் பாடலால் அறியலாம்.

**அரசியலறம்**

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று வாழ்ந்தது சங்கச் சமூகம். மக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் சக்தி அன்று முதல் இன்று வரை அரசியலுக்கே உண்டு.

**i. தன்மான உணர்வு**

பண்டைத் தமிழர்கள் தன்மான உணர்வு மிக்கவர்களாகக் காணப்பட்டனர். கரிகாலனோடு போரிட்டுத் தோற்ற சேரன் நெடுஞ்சேரலாதன் தன்மான உணர்வினால் நாணி வடக்கிருந்து உயிர்விட்டான் என்பதை,

**'கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை**

**மிகப்புக முலக மெய்திப்**

**புறப்புணி ணாணி வடக்கிருந் தோனே" (புறம்,66)**

என்னும் வெண்ணிக்குயத்தியார் பாடலடியின் வழி அறியமுடிகிறது. பரிசில் வழங்கக் காலம் தாழ்த்தியதால் அதியமான் மீது கோபம் கொண்டு ஔவையார் தன்மான உணர்வின் காரணமாகப் பரிசிலியைப் பெறாது சென்ற நிலையினை,

**"எத்திசை செல்லினும் அத்திசைச் சோறே" (புறம், 206)**

என்னும் பாடல் அடியால் உணரலாம்.

**ii. போர் அறம்**

சங்க கால மக்களில் மன்னர் முதல் சாதாரண மக்கள் வரை அனைவரும் அறத்துடன் வாழ்ந்தனர். ஒரு மன்னன் மற்றொரு நாட்டின் மீது போர்த்தொடுக்கும் பொழுது பசுவும், பசுவின் தன்மையினை ஒத்த பார்ப்பனரும், பெண்களும், தன்னுடைய குடியில் இறந்தோர்க்கு ஈமக்காரியங்களைச் செய்ய ஆண் பிள்ளையைப் பெறாத வரும் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லும் படியாகவும், தன்னால் எந்தவொரு தீங்கும் இவர்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்று நினைத்தான். இதனை,

**"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**

**தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்**

**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**

**எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினை" (புறம்,9)**

என்ற பாடல் அடிகளால் அறியமுடிகிறது.

**iii. கொடை அறம்**

பண்டைய தமிழர்கள் தன்னிடம் உள்ள செல்வத்தினைப் பிறர்க்குக் கொடுப்பதன் வாயிலாக இன்புற்றனர். இல்லையென்று தன்னிடம் வருவோர்க்குத் தன்னால் இயன்ற அளவு கொடுத்துப் புகழைப் பெற்றார்கள். வறியவர்கள் தன்னிடம் வந்து இரந்து நின்றால் அவர்களுக்கு பழமையான சிறப்புமிக்க நாட்டைக் கொடிப்பினும் உயிரைக் கொடுத்தல் சிறந்தது என நினைத்தனர். இத்தகைய அறச்செயலை,

**"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி**

**ஈயென இரக்குவர் ஆயின் சீருடை**

**முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்**

**இன்னுயிர் ஆயினும் கொடுக்குவர்" (புறம், 73)**

என்னும் புறநானூற்றுப் பாடல் வெளிப்படுத்துகிறது.

**iv. நீதி அறம்**

பண்டை கால மக்கள் சட்டத்தையும், நீதியையும், தங்களுடைய இரு கண்களாகப் போற்றி வந்தனர். பசுவின் கன்றைத் தேர்க்காலில் ஏற்றிக் கொன்ற தன் ஓரே மகனைத் தேர்க்காலில் ஏற்றிக் கொன்று பசுவிற்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழன் போன்ற நீதி வழுவாத மன்னர்கள் இருந்தனர்.

நான்கு படைகளும் சிறப்பானதாக இருப்பினும் நம்முடையவர் என்று சார்ந்தும் தனக்கு வேண்டாதவர் என்று விலகியும் முறை செய்யாமல் அறநெறியில் நின்று நீதி வழங்கிய மன்னனின் செயலை,

**"நான்குடன் மாண்ட தாயினு மாண்ட**

**அறநெறி முதற்றே யரசின் கொற்றம்**

**அதனால் நமரெனக் கோல்கோ டாது**

**பிறரெனக் குணங்கொல் லாது"** (புறம், 55)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

**முடிவுரை**

புறநானூற்றுப் பாடல்களில் காணப்படும் பொதுவான அறநெறிகள் அனைத்தும் எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியவையாகும். பண்டைத் தமிழர்கள் அறவழிப் பொருளையும், அறவழி இன்பத்தையும் பெறவேண்டும் என்ற கொள்கை உடையவர்களாக வாழ்ந்தனர். சமூகத்தை வழிநடத்திய மன்னர்களும், மக்களும் அவற்றை விட்டு நீங்கினாலும், தண்டமிழ் புலவர் பெருமக்கள் அவர்களை நல்வழிப்படுத்தியுள்ளனர்.

# திருவாய் மொழியில் அறம்

*அ.இரா.அறிவொளி, பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரூர், தருமபுரி மாவட்டம்.

பழந்தமிழ் சமூகம் என்பது பிறமொழி பேசும் மக்களை காட்டிலும் தமிலுக்கென ஒரு தனிப்பெறும் அடையாளம் இன்று வரை இருகிறது என்றால், அதன் காரணத்திற்கு பெறும்பங்கு வகிப்பது இலக்கியமும் அது காலம்தோறும் வெளிப்படுத்தும் அறக்கருத்துக்கள் ஆகும்.

இலக்கியம் என்பது இலக்கு +இயம் = இலக்கியம். அதாவது ஓர் இலக்கை அடைதல் என்று பொருள் இக்கருத்தையே மு.வ.தன் **இலக்கிய திறனாய்வு** என்ற நூலிலும் சிதம்பரரகுநாதன் **இலக்கிய விமர்சனம்** என்ற தன் நூலிலும் வலியுறுத்தியுள்ளனர். பக்தி இலக்கியத்தை பொருத்தவரையில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதி பொருள்களையும் அறவழி என்ற தக்க சன்மார்க்க நெறியோடு அனுகினால், இறைவனை அடைய முடியும் என்பதை வழியுறுத்துகின்றன.

ஐவண இலக்கியத்தை பொருத்தவரையில் 'வேதம் தமிழ் செய்த' நம்மாழ்வார்களால் இயற்ற பட்ட திருவாய் மொழியிலிருந்து அவர் உணர்த்த வரும் அறத்தை எனது ஆய்வு கட்டுரையின் கருதுகோளாகக் கொண்டு ஆராய முற்படுகிறேன்.

**சமற்பணத்தில் அறம்**

சமற்பணம் என்பது உள்ளம் அடையும் நிலையாகும். பெரும்பாலான இலக்கியம் மனிதனது தேவைக்கேற்ப தன் போக்கை பிரதிபலித்துக் கொண்டலும், வைணவ இலக்கியத்தைப் பொருத்தவரையில் நிலையான ஆன்மா ஒன்றேதான் நித்தியத்துவம் வாய்ந்தது என்று அதனிடையே நம்மை சமா்ப்பணம் செய்யுங்கள் என்ற அத்வைத கருத்துக்காளை வலிவுறுத்துகிறது.

வேதம் தமிழ் செய்த நம்மாழ்வாரும் இதற்கு விதிவிலக்கல்ல என்பது இங்கு குறிப்பிட தக்கது. இவரால் பாடப்பெற்ற திருவாய் மொழியின் முதல் பத்து பாசுரங்களிலேயே இதற்கான செய்தியினை வெளிப்படுத்தியிருக்கிறார். தன் மணம் யாரை நாடவேண்டும் என்றவிடுத்தில்.

**"துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" (தி.ப.1)**

என்று பாடும் நம்மாழ்வார், ஆதியும், அந்தமுமாய் எதிலும் நிறைந்துள்ள இறைவனது திருவடிகளை பற்றுதல் அறம் என்று தனது சமா்ப்பணத்தில் தலைக்கட்டுகிறார்.

ஒரு தலைவின் சமா்ப்பணம் தலைவனைச் சா்ந்தது. ஒரு குழந்தையின் சமா்ப்பணமோ

ஈன்றவர்களையே சார்ந்தது.

**"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவருக்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை" திருக்குறள்.அ..5.1**

முப்பாலார் இங்கு இல்லறத்தானின் கடமைகளை வலியுறுத்தினாலும், துணையும் ஒருவித சமா்ப்பணமே என்பது மறைப் பொருளாக வைத்தவர். நிலையற்றதை நிலையானவை என்று கருதலாகாது என்று மற்றொரு இடத்தில் கூறியிருக்கிறார்.

**“நிலையில்லாத வற்றை நிலையின என்றுரைக்கும்**

**புல்லறு வண்மை கடை திருக்குறள்.அ.34.331**

பிறகு எது நிலையானது என்று ஆராயும் இடத்து சைவர்கள் சித்தாந்த தத்துவமான பதி, பசு, பாசம் என்ற உயரிய கருத்துக்களை இலக்கியத்தில் புகுத்தியதுபோல், ஆன்மா ஒன்றே எனற அத்வைத கருத்துக்களை வலியுறுத்தும் நம்மாழ்வார் மாயோன் ஒருவனை நித்திய துவம் என்றும், அந்த பரம்பொருளின் அங்கமே வகையறிந்து சூட்டப்பட்ட பெயர்களுக்கு உரியவன் என்கிறார்.

**“ஆம்வை யாயவை யாயநின்ற அவரே”** திரு.ப.4

எவரை வணங்கினாலும் அவரவர் விதிவழி பலனை அடையாளம் என்கிறார்.

**“அவரவர் ரிறையவர் குறைவில் ரிறையவர்**

**அவரவர் விதிவழி யடையநின் றனரே.”** திரு.ப.5

இவ்வாறு சமர்ப்பணத்தில் ஒருவித அறத்தை வழியுறுத்தும் நம்மாழ்வர் நிலையற்ற வாழ்வின் மீது சமர்ப்பணத்தை விடுத்து, நிலையான இறையருளிடம் முழு சமர்ப்பணத்தை நல்குதல் நீங்காத நிறையறம் பெறலாம் என்பதை குறிப்பிடுகிறார்.

**பக்தி மார்க்கத்தில் அறம்**

பக்தி என்பது வணங்குதலாகும். உருவமற்ற நிலையே நீங்கி மாயோனின் கல்யாண குணங்களை உருவமாகவே வைத்து வழிபடுவதை பக்தி என்று திருவாய் மொழி எடுத்து இயம்புகிறது. மனிதன் உருவமற்ற ஒரு பொருளின் மீது தன் சமர்ப்பணத்தை செலுத்தாமல், உருவமுள்ள ஒரு வடிவத்தின் மீதே மனமானது தாவுகின்ற முறைக்கு இம்முறை ஏற்புடையதாகும். இதனை ஆழ்வார் பக்தியை உடைய பக்தர்களுக்கு எளிதில் அணுகக் கூடியவனும், மற்றவர்களுக்கு விந்தையாக இருக்கக் கூடியவன் என்று குறிப்பிடுகிறார்.

**“பத்துடை யடியவர்க் கெளியவன பிறர்களுக்**

**கரிய வித்தகண்”** **திரு.ப.23**

இப்பாடலில் எளியவன் என்ற ஆண்பாலை குறிப்பிடும் ஆழ்வார்

**“ஆடுஉ அறிசொல் மகடூஉ அறிசெல்” கிளவியாக்கம் .நூ.2**

என்ற நூற்பாவில் ஆண்பாலை உயர்திணைக்கு உட்படுத்தி. தொல்காப்பியர். சூத்திரம் அமைத்தமைக்கு நம்மாழ்வார் இறைவன் என்ற ஆண்பாலுக்கு வடிவம் கொடுப்பதோடு அதற்கு உயிரோட்டம் அளித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இறைவனின் அவதாரங்களை நோக்கும் பொருட்டு இலக்கியத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற தரவுகள் அனைத்தும் புராணச் செய்திகள் என்பதால் அவற்றில் காட்டப் பெறும் இறைவனின் உருவ வடிவத்தின் மீது பக்தியை செலுத்துவதினாலும், அறவழியை அடையளாம் என்பதை தன் பாசுரங்கள் வழியாக சுட்டிக்காட்டுகிறார்.

**“அறியாமைக்குறனால் நிலம்மாவலி முடிவு யென்று**

**அறியாமை வஞ்சித்தா யெனதாவியுன் கலந்தே” திரு.ப.135**

இப்பாசுரத்தில் தனது உண்மையை பிறர் அறியாதபடி வாமன மூர்த்தியாகி மூன்றடி நிலம் வேண்டும் என்று சொல்லி வஞசித்து நிலத்தைக் கவர்ந்தவனே, எனது ஆவியுள் கலந்து அறியாமையை விளைவிப்பதான சம்சாரத்தில் ஆழ்ந்து கிடந்த எண்ணை தொண்டு படுத்துதலுக்கு அறியா அக்காலத்திலேயே தொண்டு செய்யும் தொழிலுக்கான ஆவலை உண்டாக்கிவைத்தாய் என்று பாடுகிறார்.

இப்பாசுரத்தில் வாமன அவதாரத்தின் காரண காரியத்தின் தன்மையே விளக்க முற்பட்டவர், அவனை நினைக்கும் மாத்திரத்தில் தொண்டு செய்யும் ஆவலை அருளினாயே ! என்ற பக்தியால் விளைந்த அறத்தை சுட்டிக் காட்டுகிறார். இம்முறையில் அவதாரத்தின் காரணத்தை விளக்க முற்படாத பொய்கை ஆழ்வார், அவதாரத்தின் செயல்களை முன் நிறுத்தி அதற்கு உருவமாய்

இருப்பவனும் அவனது நாமத்தை மட்டுமே பார்ப்பது, கேட்பதுவுமே அன்று, வேறெதுவும் அறியேன் என்கிறார்

**“சூனாக வுண்டான் உருவோடு பேரல்லால்**

**காணக் கண் கேல செவி”**

**பொய்கையாழ்வார் முதலாம் தருவந்தாது**

இவற்றையொல்லாம் ஆறாயுமிடத்து உருவகத்தின்மீது பக்தியை செலுத்துவதன் மூலம், அறத்தை வழிவுறுத்தலாம் என்பதோடு காரணமற்ற சமர்ப்பணத்தையும் பக்திமுறை ஏற்படுத்துகிறது என்பதை உருதியாகிறது. பக்தி நெறியைப் பற்றி சில பாசுரங்களில் பாடும் நம்மாழ்வார் இப்பாடல்களை பொருளுணர்ந்து பாடவல்லவர்கள், பெரும் திரளாக திரண்டு கூத்தாடி கலிப்புறுவர் என்கிறார்.

**“குழாங்கொளாயிரத்து ளிவைப்த்து முடன்பாடி**

**குழாங்களாயடியிருடன் கூடிநின்றாடுமினே” திரு.ப.53**

இங்கு கலிப்படைதல் என்பது மகிழ்ச்சி என்ற சொல்லை குறிப்பதால், இம்முறையை பின்பற்றும் பக்தர்கள் ஆலயம் மற்றும் திருவிழா போன்ற இடங்களில் இறைவனை முன்னிறுத்திய பக்தர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட கலிப்பின் காரணமாக பல நற்காரியங்களில் ஈடுபடுவதற்கு பக்தி மார்க்கமே காரணமாக அமைவதை திருவாய் மொழி எடுத்துரைக்கிறது.

**ஞானமார்க்கத்தில் அறம்**

ஞானமாக்கத்தில் பக்தி என்பது உருவமற்ற நிலையில் நிலையான தத்துவத்தின் மீது பற்றுதல் கொள்வதாகும். சித்தர்களது இலக்கியம் இதற்கு முன்னோடி என்றாலும், வைணவ இலக்கியத்தை பொருத்தவரையில் திருவாய்மொழியிலும் இதற்கான குறிப்புகள் இடம்பெற்றுள்ளது பதி, (இறைவன்) பசு, (ஆன்மா) பாசம் (உலகம்) என்ற நீங்காத தத்துவத்தை உணருதலே ஆன்மீக நெறி என்று உலகிற்கு இம்முறை வலியுறுத்துகிறது. இறைவனுக்கென ஒரு வடிவம் இல்லை என்று உரைக்கும் நம்மாழ்வார், ஞான சுடர் ஒளியான எல்லாத்தன்மையுள்ளும் நிறைந்துள்ளான் என்கிறார்.

**“சூழ்ச்சி ஞானச் சுடரொளி யாகி, என்றும்**

**ஏழ்ச்சிகே டின்றி எங்கனும் நிறைந்து வெந்தாய்” திரு.ப.237**

இதனையே வல்லளாரும் தன் திருவருட்பா என்ற நூலில் இறைவனை அருட்பெரும் ஜோதி என்கிறார் திருமழிசையாழ்வாரும்,

**“சொல்லினால் செலப்படாது தோன்றுகின்றசோதிநீ” திருசந்த விருத்தம். ப.11**

இவ்வாறு எல்லோருக்கும் பொதுவான உருவமற்ற ஜோதியே இறைவனது வடிவம் என்பதால், பக்தியில் ஒருமைபாடு என்ற அறம் மேலோங்கி நிற்பதற்கு இம்முறையையே திருவாய்மொழி எடுத்துரைக்கிறது. இறைவனையே ஆன்ம ரூபமாக குறிப்பிடும் நம்மாழ்வார், அவ்வான்மா தங்குமிடமான நமது சரீரம் மின்னலைக் காட்டிலும் நிலையானவை அல்ல என்கிறார்

**“மின்னின் நிலையில – மன்னுயி ராக்கைகள்**

**என்னு மிடத்து இறை – உன்னுமின் நிரே” திரு.ப.12**

சரீரம் நிலையற்றது என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்காத திருமழிசையாழ்வார்,

**“என்னிலாத மாயநின்னை யென்னுற் நீக்க லென்றும்”**

**திருசந்த விருத்தம். ப.90**

என்று சரிரத்தை முன்னிருத்தி பாடுகிறார். திருமங்கையாழ்வரோ!

**“ஒடினேன் ஒடியுயவதோர்ப் பொருளால் உணர்வெனும் பெரும் பதம் திரிந்து”**

பெரியதிருமொழி ப.1

என்று உடலை வெறுத்து உள்ளிருக்கும் ஆன்மாவை உயர்த்தி பாடுகிறார். முடிவாக, ஆன்மா தங்குமிடமான சரீரம் குறித்த நம்மாழ்வரது கருத்திற்கு இலக்கணமுறைப்படி புகழ்வதுபோல பலிப்பதும், பலிப்பதை போல புகழ்வதும் என்ற வஞ்சப்புகழ்ச்சி யணியின் அடிப்படையிலேயே தெரிவித்திருக்கிறார் என்பதற்கு சான்றாக, சரீரமானது நிலையற்றது என்பதற்கு

**“புக்கில் அமைந்தின்றுெ கொல்லோ உடம்பினுள்**

**துச்சில் இருந்த உயிர்க்கு”** திருக்குறள். அ.33.340.

என்ற குறலும், சரீரத்தின் முக்கியத்துவத்தை உணரும் பொருட்டு

**“பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**

**செம்பொருள் கான்பது அறிவு”** திருக்குறள். அ.35.358

என்ற குறளும் நம்மாழ்வரது கருத்திற்கு அறமாக அமைகிறது என்பது புலனாகிறது. இவ்வாறு ஞானமார்கத்திற்கு அறமாக திருவாய் மொழியில் எண்ணற்ற அறங்களை நம்மாழ்வார் வளியுறுத்துகிறார்

**முடிவுரை:**

திருவாய்மொழியில் அறம் என்பதற்கு ஒரு மனிதன் வாழ்வாங்கி வாழ்வது நற்கதியினை அடையலாம் என்பதை உணர்த்த முற்படும் நம்மாழ்வார், சமற்பணத்தால் அறத்தை உணாந்தது மாயோனின் நிலைத்த தன்மையோடு பொருந்தியிருத்தல் பற்றியும், பக்தியென்ற அளவில் அறிந்தோ, அறியாமலோ! ஞானத்தால் இறைவனை ஆராய்ந்து அதனால் உணரப்பெற்ற நிலைத்த தத்துவமே அறமென்றெல்லாம் விளக்கமுற்பட்டவர், சமற்பணம், பக்தி, ஞானம் போன்ற இம்மூன்றில் எவற்றை பின்பற்றினாலும்

**பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்**

**இறைவன் அடிசேரா தார்.**

என்ற வள்ளுவரின் கருத்துப்படி பிறவியென்னும் பெருங்கடலை நீந்தி இறைவனை அடையலாம் என்பதை உணர்த்த வரும் நம்மாழ்வார், அறமே இறைவன் என்பதை திருவாய்மொழியின் வழியாக அறியலாம்.